பதினைப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

ௐ

இந்துசாதனம்

SUPPLEMENT TO
THE HINDU ORGAN.

௵ (1889 இவணிமீ உடாக ஆரம்பமானது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—௪௮ } யாழ்ப்பாணம்:— தாது௵ சித்திரைமீ ௨௯ (1936 மே 11) திங்கட்கிழமை { இலக்கம்—௯

செந்தமிழ் நூல்கள் கூறும் ஐந்திணை அமுதம்

கலைமகள் என்னும் சஞ்சிகையில் வித்துவான் இராசமாணிக்கம் எழுதியது

(முற்றொடர்)

இருவரும் ஒருவரை ஒருவர் காதல் கூர் கண்ணால் கவ்வ, அவ்வின்பப் பார்வையைக்கண்டுமகிழ்ந்து முல்லை முறுவல் கொள்வதை எவரே இல்லை என்பர்!

நெய்தல் நெகிழ்ச்சி

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். தலைவனது நீண்ட பிரிவால் தலைவிக் கேற்படும் மனநெகிழ்ச்சி 'நெய்தல்' எனப்படும். பறவைகள் இல்லம் நோக்கித் திரை கடல் கடந்து மீள்வதையும், காலையிற் சென்ற பரதவர் தம் தாளாண்மையாற் பெற்ற பொருளுடன் தத்தம் இல்லார் மகிழக் கரைசேருங் காட்சியையுங் காணுந் தலைவிகுத் தனிமையும், மதியும், கடலும், காருளும், பிறவும் கூற்றாயமைகின்றன. அவள் கணவனது நெடும் பிரிவால் நெகிழ்ச்சி அடைகின்றாள். அந்நெகிழ்ச்சியால், "என் இயற்கையழகு கெட்டது; தோள்கள் அழகிழந்தன; நெஞ்சம் தணுக்குறுகின்றது; கண்கள் துயின்றில; முகமோ வெளுத்துள்ளது; தலைவனோடுவெண்பல கூட்டி விளையாடியதன் பயனாக யான் இங்ஙனே விளிவதோ? கடற்கழியில் வெண்குருகு கத்துகின்றது; அலைகள் கரையைப் பொருகின்றன; குளிர்ந்த பூஞ்சோலையின நறுமண மலர்களை அலைகள் சிதறவடிக்கின்றன."

"தோல்கலின்தொலைந்த தோணலம்சாஅய்
அல்லல் நெஞ்சமொடல்கலும் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ?
வெண்குருகு நரலும் தண்கமழ் கானல்
பூமலி பொதும்பர் நன்மலர் மயக்கி
விலங்குதிரை உடைதரும் துறைவனொடு
இலங்கெயிறு தோன்ற நக்கதன் பயனே?"

—குறுந்தொகை 38

என்றிவ்வாறு பண்டவன் பண்பும், இன்னல் தரும் தன் ஏகாந்தமும் எண்ணி எண்ணித் தலைவி ஏங்குதல் முதலியன 'நெய்தல் நெகிழ்ச்சி'யாகும்.

மருதத்தின் மாண்பு.

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். இதன் ஒழுக்கம் ஊடல் என்பது; ஊடல் நிகழ்ந்த வழிக் 'கூடலும்' உண்டென்பது கூறாதே அமையுமெனக் கொள்க. எனினும் இவ்வூடற்குக் காரணம் யாதென ஓர்வது உறுபயன் விளைப்பதாகும். குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல் நிலங்களின் அமைப்புந் தொழிலும் நோக்குவோர்க்கு ஆடவர்தம் அரிய நேரம்மிகக்குறுகியதென்பது தெளிவு. அந் நிலங்களில் உணவு தேடலிலேயே ஆடவனது பகற்போதெல்லாம் செல்லும் இயல்பினது. அவனைப் போலவே, மகளிரும் தினைப்புனக் காவல், தயிர் கடைதல், விற்றல், மீனுப்புப்படுத்தல், உப்பெடுத்தல் முதலிய அருந்தொழில்களில் ஈடுபடுவர். எனவே இந்நிலங்களில் உள்ளோர் ஆண்டு முழுவதும் உழைத்து உண்ண வேண்டுபவராகின்றனர். ஆகவே இங்குள்ள ஆடவர் அறநெறி தவறிநடக்கச் சிறிதும் வழியில்லை ஆனல்

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

பஞ்சாக்கரப் பதிகம்
பண்: காந்தார பஞ்சமம்.

துஞ்ச லுந்துஞ்ச லிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்

தேசிய சுகாதாரப்பாக்கள்

[நாமக்கல் வே. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் இயற்றியவை]

1 உலகினிற் சிறந்ததென்றும் உருவினிற் பரந்ததென்றும்
உயர்தவ யோகர்சித்தர் ஒப்பிலார் இருந்ததென்றும்
பலவளம் நிறைந்ததென்றும் பகுத்தறி வுயர்ந்ததென்றும்
படித்தனம கேட்டோமந்தப் பாரத தேசமக்கள்
புலபுல வென்றுநித்தம் புதுப்புது நோய்களாலே
புழுக்கள்போல் விழுந்துமாண்டு போவதைக் கண்டுமையோ
விலகிட வழிதேடாமல் விலங்கினம் போலவாழ்ந்து
விதியென வாதம்பேசி வீணராயிருத்தல் நன்றோ?

2 கற்பமும் அறிந்துகாய சித்தியுங் கற்றமேலோர்
பற்பலர் இருந்தவிந்தப் பாரத தேசமக்கள்
அற்பமாய் ஆயுள்குன்றி அழிந்திடல் ஏனோவென்று
சொற்பனந் தன்னிற் கூட எண்ணிடத் துணிந்தோ மில்லை

3 உடல்வலி மிகுந்து நல்ல ஊக்கமும் உறுதி பொங்க
உலகினில் இன்பமெல்லாம் உயர்வழி அநுபவித்த
திடமுள வீரர் திகழ்ந்தஇச் சிறந்த நாட்டில்
சிறியதோர் நோய்வந்தாலும் தாங்கிடத் திறனில்லாமல்
நடைபிணம் போலநாமும் நாள்கழித் திருந்தோமையோ
நாடிலோம் இதனைமாற்ற நல்வழி யென்னவென்று
மடமையோ மதியோ அன்றி விதியெனும் மயக்கந்தானோ
மாற்றநாம் அல்லவென்றால் மதியினாற் பயன்தானென்னே

4 முற்றிய ஒழுக்கத்தாலும் முறைதெரி வாழ்க்கையாலும்
பெற்றவர் காணமுன்னர் பிள்ளைகள் இறந்ததில்லை
கற்றவர் பெரியோர் நித்தம் கதைகளிற் சொல்லக் கேட்டோம்
இற்றைநாள் கோடி கோடி பிறக்குமுன் இறப்பதேனோ!

5 பிணியிலே பிறந்துநித்தம் பிணியையே அருந்திப்பொல்லாப்
பிணியிலே வளர்ந்துஅந்தப் பிணியினாற் சாகக்கண்டும்
அணியிலே ஆடையாலே அலங்கரித் தோமேயன்றி
அறிவிலே ஆசாரத்தால் அழகெதும் செய்தோமில்லை
பணியிலும் பணத்திலேயே சுகமெலாம் இருந்தாற்போலப்
பழகினோம் நாமேயன்றிப் பழக்கினோம் மக்கள்தம்மை
துணிவிலோம் தூய்மையில்லோம் சுசிகர நடத்தையில்லோம்
துவக்குவோம் இனிமேலேனும் நோய்களைத் துடைக்கும்வாழ்க்கை

6 மணத்தையே விரும்பியோடி மலரினைக் கசக்குவார்போல்
பணத்தையே பெரிதென்றெண்ணிச் சுகத்தினைப் பழித்துவாழ்ந்து
குணத்தையே விலைக்குவிற்றுக் குரங்கினைக் கொண்டாற்போல
இனத்தையே பிணிகள்வாட்ட இருந்தனம் அறிவிருந்தும்

7 உண்டியில் ஆசை வைத்தோம் ஒழுக்கமே மறந்து போனோம்
பெண்டினர் மக்கள் தம்மை வளர்த்திடும் முறைமைபேணோம்
மண்டையி லெழுத்திதென்று மயங்கினோம் கர்மந்தன்னை
மண்டின நோய்கள் க்ஷாமம் மலிந்திட நலிந்தோமையோ.

கடலின்கீழ்ப் பூகம்பம்

கடலின்கீழ் ஏற்பட்ட ஒரு பூகம்பம் காரணமாக ஏப்ரில் மாதம் இரண்டாவது வாரத்தில் ஓர் டாஸ்மேனியக் கப்பல் அலைகளால் தாக்கப்பட்டது. இவர் மூழ்கி இறந்தனர்.

சகோதரர் மூவர் மாண்டனர்.

கொஸ்கொடையைச் சேர்ந்த "நேப்" என்னும் கிராமத்திலசென்ற வாரம் ஒரு இரவு அண்ணன் தம்பிமாராகிய மூவர் வீட்டிற் படுத்துஉறங்கும்போது அவ்வீட்டின் நான்கு சுவரும் முகட்டோடு பாறி வீழ்ந்துவிட அவர்கள் உயிர் மாண்டனராம்

கந்தபுராணத்தின் கவி நுட்பம்

நம்மவர் கந்தபுராணத்தை மேலாகக்கொண்டு பாராட்டுதற்குக் காரணங்கள்.

'திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகடசக்கரன்மெய்ப்பதம்போற்றுவாம்

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துப் பாடப்பட்ட புராணங்களுட் கந்தபுராணமே சைவமக்களெவர்களாலும் பெரிதும் போற்றப்பட்டு வருவதாகும். இச்சைவமக்களுள்ளும் யாழ்ப்பாணச் சைவமக்கள் கந்தபுராணத்தைத் தமிழ்மறை போலத் தொன்றுதொட்டுப் பூசித்துப் போற்றி வருகின்றனர். நமது நாட்டிலே விளங்குந் தேவாலயங்கள் மடாலயங்களில் வருடந்தோறும் கந்தபுராண படனம் விதிப்படி நடைபெற ஆங்காங்குள்ள சைவமகளிரும் ஆடவரும் மிக்க நியமத்தோடும் சிரமத்தோடும் விரதத்தோடும் இப்புராணபடனசிரவணஞ்செய்து நன்மையடைந் திருக்கின்றனர்; யாழ்ப்பாண மக்கள் கந்தபுராணத்தின்மீது பாரம்பரியமாக வைத்துள்ள அபிமானத்தினால் "புராணம்" என்ற பொதுச்சொல் கந்தபுராணத்தையே இந்நாட்டிற் சிறப்பாகக் குறித்து வழங்குகின்றது. வருட மகோற்சவம் நடக்கத் தவறிய கோவிலிலும் கந்தபுராணபடனம் நடவாதொழிவதில்லை. இதுமாத்திரமா? ஒருவர் தாம் செய்யப்புகும் கருமம் அநுகூலமாகுமோ பிரதிகூலமாகுமோ என முந்தியே அறியவிரும்பினால், கந்தபுராணத்திருமுறையிற் கயிறிட்டுப் பார்த்து, கயிறிட்ட பக்கத்திலுள்ள திருவிருத்தங்களிற் பொதிந்துள்ள கருத்தையும் கதைத்தொடர்பையும் பார்த்தே தம் கருமஞ் சித்தியாதலையும் ஆகாதொழிதலையும் அறிந்து அதற்கிசைய நடந்துகொள்ளுவர்.

இவ்வியாழ்ப்பாணத்தில் வாழும் அறிஞர்கள் ஏனைய சிவபுராணங்களைக் காட்டிலும் கந்தபுராணத்தையே மேலாகக் கொண்டு பாராட்டிப் பயனடைந்து வருதற்குப் பல காரணங்கள் உள்ளன; அவற்றுள் தமியேன் அறிந்தவற்றை இங்கே தருகின்றேன்:-

க. இப்புராணம் கலியுகவரதராகிய கந்தசுவாமியின் திருவருட்செயலை விரிவாகக் கூறுவது.

உ. அப்பெருமானுடைய அநுபூதி பெற்ற அடியவராகிய கச்சியப்ப சிவாசாரியசுவாமிகளால் பெருமானது திருவருட்குறிப்பின்வழி பாடப்பெற்றது.

ந. சைவமக்கட்கு இன்றியமையா இகபரசாதனங்களைத் தெருட்டுவது.

ச. பெருங்காப்பிய விலக்கணங்கள் பூரணமாகப் பொருந்தப்பெற்ற

(தொடர்ச்சி 2 ம் பக்கம்.)

ஸ்ரீமத் பகவத் கீதைப் பொருள் விளக்கம்.

பாரதக் கதையும் அதில் ஒரு பகுதியான கீதையும்.

"அடக்கமான பௌதிக சாஸ்திரிகள் கண்டது மிக்க அதிகமாயினும் காணாததின் அளவுக்கு மிகச் சிறியது என்று கூறுவார்கள்,"

(சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி எழுதியது.)

பகவத்கீதை மகா பாரதத்தில் ஒரு பாகம். யுத்தம் ஆரம்பிக்கப்போகும் சமயத்தில் இருபுறத்திலும் ஆயத்தமாக நிற்கும் சேனைகளைப் பார்க்கலாம் என்று அருச்சுனன் தன் தேரைச் சேனைகளின் நடுவிற் கொண்டு போகும்படி சாரதியிடம் சொன்னான். அப்போது பந்துக்களும் சிநேகிதர்களும் ஒருவரையொருவர் கொல்ல ஆயுதபாணிகளாக நிற்பதைக் கண்டு அவனுடைய மனம் கலங்கி, "இதென்னவேலை? ராஜ்யம் என்னத்திற்கு, பகைவை யென்னத்திற்கு, சுற்றத்தாரைக் கொன்று சம்பாதித்த ராஜ்யாதிகார போகத்தில் என்ன சுகம்?" என்று சொல்லி, வில்லைக் கீழே போட்டு விட்டுப் பேச்சில்லாமல் உட்கார்ந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் அவனுக்குத் தேரோட்டும் சாரதியாயிருந்த கண்ணபிரான் குருவாக நின்று அருச்சுனனுக்கு உபதேசம் செய்த மொழிகளே பகவத்கீதை என்பது.

இப்படி அருச்சுனன், "யுத்தம் என்னத்திற்கு? நான் போர் செய்யமாட்டேன்" என்று சொன்ன சமயத்தில், "யுத்தம் செய்வதே உன் கடமை" என்று உபதேசம் செய்த இந்த நூல், எல்லா ஹிந்துக்களும் சம்பிரதாய வித்தியாசமில்லாமல் வேதம் போலவும் உபநிஷத்துகள் போலவும் ஒப்புக் கொண்டிருக்கும் ஒரு சாஸ்திரமாக முடிந்து, பல ஆயிரம் வருஷங்களாக அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. கேவலம் வில்லும் அம்பும் கொண்டு செய்யும் போரில், ஆரம்பித்த காரியத்தை நடுவில் விடாமல் நடத்த வேண்டி உபதேசித்த வார்த்தைகள் இவை என்று முதலிலிருந்து கடைசிவரையில் வைத்துக் கொண்டே வியாக்யானம் செய்தோமானால் இந்த அறநூலின் உண்மைப் பொருள் விளங்காமல் போகும்.

மகா பாரதக் கதையில் ஒரு பாகமாக அமைக்கப்பட்டதாயினும், பகவத்கீதை தனிச் சிறப்பும் தனிப் பொருளும் கொண்ட யோக சாஸ்திரமாக வழங்கி விளங்குகிறது. வேதத்துடன் அங்கமாகச் சேர்க்கப்பட்ட உபநிஷத்துகளுடன் இதுவும் ஓர் உபநிஷத்தாக மகா ஞானிகளால் மதிக்கப்பட்டு வருகிறது. காவியத்தின் பிரஸ்தாவனத்தையே பெரிதாகக் கருதி அதை எப்போதும் மனதில் வைத்துக் கொண்டு உபதேசங்களை யெல்லாம் பொருள் கொள்ளுவது சரியாகாது. கீதையைப் படிக்கும்போது பிரஸ்தாவனத்தை மறந்து விடுவதே நலம் என்பது என் அபிப்பிராயம். கீதையில் சொல்லப்பட்ட உண்மைகளும் உபதேசமும் எக்காலத்திலும் எச்சந்தர்ப்பத்துக்கும் பொருந்தியவையானபடியால், யுத்தகளத்தில் அருச்சுனனுக்கு ஏற்பட்ட மனக் கலக்கத்திற்கும் சந்தேகங்களுக்கும் கூடப் பொருத்தமான மருந்து கீதா வாக்கியங்களில் காணக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தின் விஷயங்களைப் பிரமாணமாக வைத்துக் கொண்டு பொதுவான ஒரு தரும சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்வது தவறான முறையாகும்.

கீதையின் சிறப்பு

ஹிந்து சமூகத்தில் அடங்கிய சர்வ சம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்களும் சாஸ்திரமாகவும் பிரமாணமாகவும் ஒப்புக் கொள்ளும் பகவத்கீதையில் சில சுலோகங்களையாவது சிரத்தாபக்தியுடன் ஆழ்ந்த சிந்தனை கொண்டு படித்தோமானால் நம்முடைய முன்னோர்கள் கண்ட மெய்ப்பொருள்களும், ரிஷிகள் ஸ்தாபித்த ஹிந்து தருமம் என்ற அஸ்திவாரத்தின் மேல் தான் நம்முடைய சகல நாகரிகமும், கலைகளும், இலக்கியங்களும், இந்தியாவில் நாம் பெருமை பாராட்டக் கூடிய மற்ற எல்லா பாக்கியங்களும் மாளிகைகளாக நிற்கின்றன. அந்த ஹிந்து தருமத்தை உள்ளபடி அறிவது நம்முடைய கடமையாகும். ஆகையால் கீதையின் சாரத்தை நன்றாகப் படித்துத் தெரிந்து கொள்ளுவது நன்மைபயக்கும். பகவத்கீதை 18 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு 700 சுலோகங்கள் நூல் இவைகளிலிருந்து 226 சுலோகங்களை எடுத்து மொழி பெயர்த்துச் சொல்ல உத்தேசித்திருக்கிறேன். இந்த 226 சுலோகங்களின் பொருளை நன்றாகக் கிரகித்துக் கொண்டால் பகவத்கீதையின் சாரம் முழுதும் கிரகித்துக் கொண்டதாகவே வைத்துக் கொள்ளலாம்.

சிற்றறிவின் மயக்கம்

பௌதிக சாஸ்திர விஷயங்கள் கொஞ்சம் தெரிந்தவுடனே சிலருக்கு மயக்கம் உண்டாகி விடுகிறது. அதிலும் மற்றவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாக, குஜிலிக்கடையில் குறைந்தவிலைக்கு வாங்கும் பழைய சாமான்கள் மாதிரி, உழைப்பில்லாமல் கிட்டிய அறிவு சிலருக்கு அதிக போதையை உண்டாக்கிவிடுகிறது. எது சிறிது, எது பெரிது, எது அணுகிநிற்பது, எது தூரம் என்ற நிதானபுத்தி கலைந்து விடுகிறது. எது தாம் அறியமுடியாததோ அது இல்லவேயில்லையென்று சாதித்து விடுவார்கள். மனித அறிவுக்கு எட்டாதது அனைத்தும் பொய் என்று தள்ளிவிட முன் நிற்பார்கள். சாஸ்திரமாவது அறநூலாவது, அனைத்தும் முட்டாள்கள் எழுதிவைத்தவை என்றும், அதற்குமேல் பேசினால், அவையனைத்தும் மனிதர்களை மோசம் செய்யவே வஞ்சனைக் காரர்களால் எழுதப்பட்டவையென்றும் சாதிப்பார்கள். ஆனால் இதே பௌதிக சாஸ்திரங்களை ஆழ்ந்து பரிசோதித்தவர்கள்—பௌதிக சாஸ்திர உண்மைகளைக் கண்டுபிடிக்க ஆயுள்நாள் முழுதும் தங்கள் சக்தியெல்லாவற்றையும் செலுத்தி உழைத்த அறிஞர்கள்—இப்படி உன்மத்த மடைவதில்லை. பௌதிக சாஸ்திரிகள் மகா அடக்கம் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். தாங்கள் கண்டது மிக்க அதிகமாயினும், காணாததின் அளவுக்குக் கண்டது மிகச் சிறியது என்று அறிவார்கள். கால அளவில் இன்னும் பல விஷயங்களை ஆராய்ச்சி செய்து பௌதிக சாஸ்திரங்களைப் பெருக்கிக் கொண்டபோதிலும், மானிட அறிவுக்கு என்றென்றும் எட்டாததும் விஞ்ஞான ஆராய்ச்சி எல்லையைத் தாண்டினதாயுமுள்ள விஷயமும் உண்டென்று அவர்கள் அறிவார்கள். உண்மையில் பௌதிக சாஸ்திரங்களை நன்றாக ஆராய்ந்து பயிற்சியும் செய்தவர்கள் அடக்கத்தை இழப்பதில்லை. தாங்கள் பெற்ற அதிக அறிவினாலேயே அதிக அடக்கமும் அடைகிறார்கள் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அதீதமான பொருள் உண்டென்பதை ஒப்புக் கொண்டு அப்பரம்பொருளின் முன்பு அறிவும் அடக்கமும் கொண்டு தலைவணங்குகிறார்கள்.

கந்தபுராணக் கவி நுட்பம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தாய், புருஷார்த்தங்கள் நான்கினையும் பயப்பதாய், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்களையும் உதாரணமுகமாக இனிது புலப்படுத்துவதாய் வேதாகமங்கள் தேவாரதிருவாசகங்களிற் பொதிந்துள்ள நுண்ணிய பொருள்களையெல்லாம் கொண்ட அரிய தோத்திரப்பாக்கள் விரவப் பெற்றதாய், பொருளிலக்கணத்தைக் கூறுவதாய் சித்தாந்த சாத்திரங்களிற் கூறப்பட்ட திரிபதார்த்தங்களையும் இனிது எடுத்துக் காட்டுவதாய் இதிகாசங்கள்போற் பல கதைகளை உரைப்பதாய், சிவமூர்த்தங்களின் பேதமான தோற்றங்களையும் அவற்றின் அருட்செயல்களையும் விளக்குவதாய், சுருங்கச்சொல்லல் விளங்க வைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் முதலிய அழகுகள் ஒருங்கு அமையப்பெற்றதாய் படிக்கப் படிக்கப், பக்திரசம் ததும்புவதாய் எத்தனைமுறை மீட்டும் மீட்டும் படித்தாலும் தெவிட்டுதலில்லாததாய், பத்தியுடன் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் எவ்வகையான இடையூறும் நீங்கு கவசம் போன்று இட்ட சித்திகளைத் தருவதாய் நிலவுவது.

௫. தமிழ்மொழியை நன்கு பயில விரும்பும் வித்தியார்த்திகட்குச் சிறந்த நூலாகவுள்ளது.

௬. பறங்கியர் ஒல்லாந்தர் இந் நாட்டிற் சைவ சமயத்தைக் கெடுத்த காலத்தும் இச் சற்சமயம் இங்கே அருகிவிடாவண்ணம் இச்சமயத்திற்குப் புத்துயிர் கொடுத்துவந்தது; இக்காலத்தும் அப்படிக் கொடுத்து வருவது.

இவை மாத்திரமல்லாமல் எத்தப் பெரியாரும் வந்தனை செய்யும் இந்தக் கந்தபுராணம் இன்னும் பல எண்ணரிய மகத்துவங்களோடு கூடியதாம். அவைகளை எடுத்துச்சொல்லத் தமியேனுக்கு அறிவும் இறைவன்மீது அன்பும் போதா. மேலும், கந்தபுராணக் கவிநுட்பம் என்ற இதில் சிறியேன் சொல்லப்புகுவன மாத்திரந்தான் இந்நூலின்கணுள்ள நுட்பங்கள் என்று எவரும் எண்ணிக் கொள்ளவொண்ணாது. "தாம் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்ற பிரகாரம் இத்திருமுறையிலுள்ள நுட்பங்கள் அவரவர் கல்வித்திறமைக்கும் கந்தக்கடவுள் மீது அவர்கள் பாராட்டும் பத்திமைக்குந் தக அதிகமாகும். இவை இரண்டும் இல்லாச் சிறியேன் காட்ட நினைத்த நுட்பங்களை அறிஞர்கள் பார்க்குங்காலத்தில "இவன் கந்தபுராணக் கவிநுட்பஞ் சொல்லத்தலைப்பட்டு, உள்ளதையுங் கெடுத்தானே கொள்ளிக்கண்ணன் என்றவாறு அந்நூலின் மகத்துவத்தைத் தன் பௌட்டிகத்தினால் விபரீதப்படுத்திக் கெடுத்துவிட்டானே' என்று என்னை இகழ்வதுங் கூடும். அதற்கு நான் என்செய்வேன்! ஆசை வெட்கமறியாது என்றபடி இப்புராணத்தின் மீது கொண்ட ஆசை என் பௌட்டிகத்தை விஞ்சிவிட்டது. வால் அறுந்த மாடு துளம்பிற்கு அஞ்சாது என்ற நிலைமையில் நிற்கின்றேன். "மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால், வைதாரையும் இங்கு வாழவைப்பான்" என்ற ஆப்த வாக்கியத்தையே ஆதாரமாகப் பிடித்துக் கொண்டேன். அல்லாமலும் இந்நுட்பத்தை ஆராயப் புகுதலால் நன்மையன்றிக் கேடு ஒருபோதும் வாராதென்பது நிசம். ஏனெனில் தமியேன் எழுதும் நுட்பங்களை அறிவுடையோராயுள்ளார் கண்டித்து உண்மையான நுட்பங்களை எழுத முற்படுவர்; அப்பொழுதும் வருவது நன்மையே. நீ காட்டுவனவல்ல நுட்பம் இவைகளே மேலான நுட்பங்கள் என்று பெரியார் எழுதப்புறப்படுவர்; அதனாலும் நன்மையே, இப்படி வருவனவற்றையெல்லாம் கண்டறிந்ததுடன் வேறு வெளியிட்டுப் பயன்படவும் பயன்படுத்தவும் இருக்கும் எனக்கு என்ன குறைவாய்ப்போகின்றதென்ற துணிவு பற்றியாதலினென்க. நிற்க,

கந்தனை வந்தித்து, எந்தையைச் சிந்தித்துக் கந்தபுராணக் கவிநுட்பத்தை ஆராயப்புகுகின்றேன்:

மேலே சொல்லப்பட்ட காப்புச் செய்யுட்கு முதலடி யெடுத்தருளியவர் முருகக்கடவுளென்பதும் திகழ் + தசக்கரம் திகடசக்கரமெனப் புணர்தற்கு விதி தொல்காப்பியத்திலில்லையாக, இந்நூலரங்கேற்றும் சபையிலிருந்த அறிஞர் இதனையிட்டு ஆட்சேபிக்க, நமது கச்சியப்பசுவாமிகள் சமாதானங் கூறவியலாது மயங்க "சங்கத்தவர்க்குத் தலைவராந் தமிழ்ப் புலவன்" தாமே ஒரு மாணிடப்புலவர்போல் வந்து ஆசங்கை தீர்த்தருளித் தமதன்பராகிய ஆசிரிய சுவாமிகளின் கல்வித்திறனையும் பத்தித்திறனையும் அவையிலிருந்தார்க்குக் காட்டி நிலைநாட்டி மறைந்தருளினரென்பதும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தக்க ஆதாரங்களோடு எழுதிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் வரலாற்றால் விளங்கக் கிடக்கின்றன.

விளங்குகின்ற பத்துத் திருக்கரங்களையும் ஐந்து திருமுகங்களையுமுடைய சிவபெருமானுடைய தேருக்குச் சில்லாயமைந்த சூரியன் வட்ட வடிவமான ஒளி பொருந்திய இரத்தினமாக அமைந்திருக்கப் பெற்ற திருவயிற்றையுடைய விகடசக்கர விநாயகரது மெய்ஞ்ஞானமாகிய திருப்பாதங்களைத் தோத்திரஞ் செய்வாம் என்பது இக்காப்புத் திருவிருத்தத்தின் பொருளாகும். (வரும்)

கொய்லன் வங்கி
(லிமிற்றெட்)
(1919-ம் ஆண்டு
திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)
யாழ்ப்பாணம்.
காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
(FIXED DEPOSITS)

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

6 மாச காலம்	3½ விகிதம்
12 மாச காலம்	4½ விகிதம்
24 மாச காலம்	5 விகிதம்

ஏனைய விபரங்களை எங்களிடம் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

V. C. ஓமன் B. A.
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36

தலைவலியுற்றபோது
லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்
தைலத்தை
நெற்றியிலும் கன்னத்திலும் தேயுங்கள்
.தலைவலி யுடனே மாறிவிடும்
அதுவுமன்றி இது இந்தியாவில்
இந்தியர்களாலேயே செய்யப்படுவது.
இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.

Y 53 1-1—31-12-36)

சகாய விலை
சிறந்த தேக்கமரங்கள்!
இந்த மேமாசம் 4-ம் தேதிதொடக்கம்
31-ம் தேதி முடிய குறைந்தவிலை.

பெருந்தொகையான தேக்கமரங்களை நாங்கள் விரைவில் இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், இப்பொழுது இங்குள்ள சிறந்த ரங்கூனியம் தேக்கமரங்களையெல்லாம், மேலே காட்டப்பட்ட தேதிகளுக்கிடையில் குறைந்தவிலைக்கு விற்பதற்காகிய ஒழுங்குகள் செய்துவிட்டோம்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.
S. வீரகத்திப்பிள்ளை & ஸன்ஸ்
தேக்கமர ஓட்டு வியாபாரிகள்.

(Mi. 25 7 5 to 31 5-36.)

கண்ணே பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்றோட் (நரியன் குண்டு) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்போது நேத்திரத்திற்குரிய. சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேர்க்கப்பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணி வரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை
சொந்தக்காரர்
த இராமலிங்கம்
வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasala
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)

Y 26. 7-5-36 to 30-4-37

பல் வைத்தியர்.

டக்டர் வி. சின்னத்தம்பி யாழ்ப்பாண வாடிவீட்டில் ஆனிமாதம் 5ம் 6ம் 7ம் 8ம் திகதிகளில் இவ்வூரில் வருத்தக்காறருக்கு சிகிச்சை செய்ய ஆயத்தமாயிருப்பார்.

(Mis. 18. 27 4 to 28-5-36.)

தபாற் கந்தோர் அதிகாரிகளை எமாற்றினா

சிவியாதெருவைச்சேர்ந்த கந்தையா— பொன்னையா என்பவருக்கு விருந்து

க. சி.

சென்ற 8-5-36 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் பொலிஸ்சப்இன்ஸ்பெக்டர் திரு அட்டிக்கல சிவியாதெருவில் வசிக்கும் கந்தையா பொன்னையா என்பவர் அவ்வூரில் வசிக்கும் கந்தர் பொன்னையாவுக்குரிய தபாற் கந்தோர் சேவிங் வங்கியிலிருந்து பணமெடுக்கும் உத்தரவுப்பத்திரமொன்றுக்கு கள்ளக்கையொப்ப மிட்டதுமல்லாமல் சுண்டிக்குளித்தபாலாபீஸ் போஸ்ட் மாஸ்டரையும் ஏமாற்ற எத்தனித்ததாகவும் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

K வேலுப்பிள்ளை போஸ்ட்மாஸ்டர் கூறியதாவது:—

சென்ற மாசிமீ 15-ந் திகதி சாவகச்சேரியில் வசிக்கும் கந்தையா பொன்னையா என்பவர் தபால் ஆபிஸ் சேவிங் வங்கியில் பணமெடுக்கும் பத்திரமொன்றில் தான 50 ரூபா எடுக்கப்போவதாகச் சொல்லித் தனது வங்கிப்புத்தகத்தை என்னிடம் கொடுத்தார். நான் புத்தகத்தைப் பார்த்துவிட்டு நானும் கையொப்பம் வைத்து கொழும்புக் கந்தோருக்கு அனுப்பினேன். அப்புத்தகத்தின் இலக்கம் C 68417. இப்படி அனுப்பிக் கொழும்பிலிருந்து எடுக்கும் பணத்துக்கு எடுப்பவருக்கு ஓர் வாறண்டு கிடைக்கும் அதைக் கொடுத்தால்தான் நாங்கள் காசுகொடுப்போம் இது சம்பவம் நடந்து இரண்டு நாளைக்குப்பின் 18-ந் திகதி 83372 இலக்கமிடப்பட்ட வாறண்ட் ஒன்றை(ஓர் கந்தையா பொன்னையா) K கந்தையா எனக்கைச்சாத்திட்டுக் கொண்டுவந்து காசுதரும்படி கேட்டார். இவரை எனக்குத்தெரியாது முந்தின கந்தர் பொன்னையாவைத் தெரியும். நான் ஓர் சாட்சிகொண்டுவரச் சொன்னேன். அப்போது அவர் யாழ்ப்பாணக் கச்சேரியில் சேவகனாய் இருக்கும் V. மயில்வாகனத்தைக் கூட்டிக்கொண்டு வந்து வைப்பித்தார். இதன் பிறபாடு நான் புத்தகத்தைக் கொண்டுவர மறந்துவிட்டதாகவும் தனக்கு அவசரமாய் பணம் தேவைப்படுவதாயும் தேவையாயின் மறுநாள் கொண்டுவந்து தருவதாயும் கூறினர்.

நான் எதுவானாலும் காசுதரமுடியாது என்றதால் தான் மறுநாள் வருவதாகச் சொல்லிச்சென்று விட்டார். மறுநாள் அவர் வந்து அப் புத்தகத்தைக்கறையான் தின்றுவிட்டதென்று சொன்னர். நான் அவரைத் தபாற்கந்தோர் அதிகாரிகளிடமிருந்து ஓர் பதில் பிரதிப் புத்தகம் எடுப்பிக்கச்சொன்னேன். இதற்கிடையில் பெரிய கந்தோரிலிருந்து காசு கொடுக்க வேண்டாமென அறிவித்தல் கிடைத்தது ஒருவாரத்தின் பின் இதன் உண்மையான சொந்தக்காரன் என்னிடம் வந்து தான் அனுப்பிய பத்திரத்துக்கு இன்னும் வாறண்டு வரவில்லையென முறையிட்டார். நான் அப்போது அவரைக் கொழும்புக்கெழுதி அறியும்வண்ணம் சொன்னேன் சிலகாலத்தின்பின் இவ்வாறண்டைத் தப்பாக ஆள்மாறிக் கொடுக்கப்பட்டதாக அறிந்தேன். நான் கச்சேரிச் சேவகனிடம் இதை அறிவித்து ஒழுங்கு செய்யுமாறு சொன்னேன். இல்லாவிட்டால் இதையிட்டு அநேக தொந்தரவுகள் நேரிடுமென்று சொன்னேன். அவர் இவற்றையெல்லாம் ஒழுங்கு செய்தார். பின்பு சொந்தக்காரனாகிய கந்தர் பொன்னையா இவ்வாறண்டைக் கொண்டுவந்து தந்து தனக்குத்தேவையான காலத்தில் காசு எடுக்க முடியாததால் தனக்குக் காசுதேவையில்லையென்று சொல்லிப் புத்தகத்தையும் வாறண்டையும் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார். வருகிற மாதம் 25ந் திகதி கோட்டுக்கு வருமாறு எதிரிக்கு வாறண்டு அனுப்பப்பட்டது.

கோட்டுச் செய்திகள்

க. சி.

சங்கிலியறுத்த வழக்கு

சென்ற 7-5-36 வியாழக்கிழமை சண்டிருப்பாய் பொலிஸ் விதானை வவனியாவில் வசிக்கும் கந்தையா மாரிமுத்து என்பவன் சிரணி நாகம்மாள் கோவிலில், வி. சரவணையின் சகோதரனுடைய மகளின் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடினதாகக் குற்றஞ்சாட்டி வழக்குத்தொடர்ந்தான்.

வி. சரவணை கூறிய சாட்சியாவது:-

சென்ற 5 ம் திகதி நான் சிரணிக் கோவிலில் நிற்கும்போது எனது சகோதரனும் தனது மகளை இடுப்பில் வைத்துக் கொண்டு நிற்கும்போது இவ்வெதிரி அப் பிள்ளையினுடைய கழுத்திலிருந்த சங்கிலியை இழுத்து அறுத்தான். இதைக் கண்டதும் நான் ஓடிச் சென்று எதிரியைப் பிடித்தேன். இவ் வெதிரியை முன் எனக்குத் தெரியாது. சங்கிலியின் பெறுமதி ரூபா 75. இதன்பின் 14-5-36 க்கு வழக்குத் தவணையிடப் பட்டது.

திருட்டு வழக்கு

7-5-36 வியாழக்கிழமை சாயந்தரம் யாழ்ப்பாணம் புலைகரதஸ்தானத்தில் சென்ற மார்கழி மாதம் 16 ம் திகதி மீசாலையில் வசிக்கும் சபாபதிப்பிள்ளையின் மகள் பாக்கியம் என்பவளுடைய கையிலிருந்த காப்பை வயாவிளானில் வசிக்கும் சி. சின்னத்துரை என்பவன் களவாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. அப்போது எதிரி தான் டான். எதிரி முன்னும் இப்படியான ஐந்து களவுக் குற்றச் சாட்டுகளில் அகப்பட்டு மறியலுக்குச் சென்றிருந் திருக்கிறான். நீதிபதி எதிரிக்கு 18 மாதக்கடுங்காவல் தண்டனையும் 2 வருடப் பொலிஸ் பாதுகாவலும் விதித்தார்.

உண்டியல் திருட்டு

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் சென்ற7–5–36 வியாழக்கிழமை இந்தியாவில் வசிக்கும் செல்லையா சந்தனம் என்னும் ஒருவன் ஓட்டுமடத்தடியிலுள்ள கத்தோலிக்க கோவிலில் உள்ள உண்டியல் பெட்டியை உடைத்துப் பணத்தை எடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டதால் எதிரிக்கு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனையும் 2 வருஷப் பொலிஸ் காவலும் விதிக்கப்பட்டது.

வழக்குத் தள்ளுப்பட்டது

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட் 7-5-36 வியாழக்கிழமை கொக்குவிலில் வசிக்கும் முத்ததம்பி செல்லையா இணுவிலில் வசிக்கும் வைரமுத்து பொன்னையா என்னும் வியாபாரிக்குப் புகையிலைக் கொடுக்கல் வாங்கற் கணக்கால் 137 ரூபாவுக்குக் கொடுத்த கோட்டுக் கணக்கால் பெரிய கோட்டில் வைத்த வழக்கில சமாதானமாக ஓர் தீர்ப்பு நடந்தது. அப்போது அந்த கோட்டால் 137 ரூபா என்று இடப்பட்ட இலக்கம் 237 ரூபாவாக மாற்றப்பட்டு இருக்கக் காணப்பட்டது. இவ் வழக்கு விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியல்லவெனக்கண்டு வழக்கைத் தள்ளிவைத்தார்.

செய்தித்திரட்டு

ஆட்டுப்பட்டித்தெரு வாசிக்கு அபராதம்.

தன் வீட்டில் சின்னம்மைப் பிணியாளிகள் இருப்பதை முனிசிபாலிட்டிக்குத் தெரிவிக்கத் தவறியதற்காக ஆட்டுப்பட்டித்தெருவாசியான ஏப்ரஹாம் சிங்கோ என்பவனுக்கு கொழும்பு முனிசிப்பல் கோர்ட்டில் இம்மாசம் 4-ந் திகதி 15ரூபா அபராதம் விதிக்கப்பட்டது எதிரியின் வீட்டில் 5 குழந்தைகளுக்கு சின்னம்மை கண்டிருந்ததாகச் சுகாதார இன்ஸ்பெக்டர் திரு பிடியஸ் கூறினர்.

தண்டவாளத்தில் சிக்கிய காத்தை.

விறகு ஏற்றிச் சென்ற ஒரு இரட்டைமாட்டுக்கரத்தை சென்றமாதம் 28-ந் தேதி அப்புத்தளை ரெயில்வே கேட்டைக் கடந்து செல்லுகையில் வண்டியின் சக்கரமொன்று தண்டவாளத்தில் சிக்கிக்கொண்டதால் சக்கர முடைந்து வண்டி சரிந்து விழுந்தது இதனால் மத்தியானம் 12-30 மணிக்குச் செல்லும் குட்ஸ் வண்டி 25 நிமிஷம் காலதாமதமாகச் சென்றது. மாடுகளுக்கு அபாயமொன்றும் நேரிடவில்லை. அருகில் நின்றுகொண்டிருந்த கேட் கீப்பருடைய மகனுக்குக் காலிற் சிறிது காயமேற்பட்டது.

கிராமாபிவிருத்தித் திட்டவேலை

கிராமவாசிகளின் குழந்தைகளுக்கு வசிப்பதற்கு நல்ல வீடுகள் அமைப்பதற்கும் அவர்களுக்கு நல்ல ஆகாரம் வைத்திய சிகிச்சையும் முதலியனவற்றை அளிப்பதற்கும் எவ்வித ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஒரு யாதாஸ்து தயாரிப்பதற்கு ஒரு கமிஷன் நியமிப்பதைப் பற்றி பிரேரணை விஷயமாய்ச் சுகாதார நிர்வாகக் கமிட்டி கூடியபோது ஆலோசித்தது.

தற்போதைய தொழில் மந்திரியால் துவக்கப்பட்ட கிராமச் சீர்திருத்தத் திட்டத்தைப்பற்றிய ஏற்பாடுகளை எதிர்பார்த்துப் பிரஸ்தாப விஷயத்தை ஒத்தி வைப்பதெனக் கமிட்டி தீர்மானித்தது.

தற்கொலை முயற்சியா?

மட்டக்களப்பு எப் 28

கல்லடி உப்போடையைச் சேர்ந்த கனகசபை இராசையா என்ற இளைஞன் கஞ்சை அருந்தித் தற்கொலை புரிய எத்தனித்ததாக மட்டக்களப்பு இன்ஸ்பெக்டர் திரு. டி. ஜே. ஏ. வி. ஜெமன்ன தொடர்ந்த வழக்கு மட்டக்களப்புப் பொலிஸ் கோட்டில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரியின் சகோதரியும் அவள் கணவனும் எதிரியுடைய நகைகள் யாவற்றையும் திருடியதாகவும் அவர்களைப் பயமுறுத்துவதற்காக எதிரி ஜின்னேடு ஆர்செனிக் பாஷாணத்தைச் சாப்பிட்டதாகவும் கூறப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். ஆறுமாதம் நன்னடத்தைக்காக எதிரியிடம் ரூபாய் 100 ஜாமீன் வாங்கிக்கொண்டு நீதவான் எதிரியை விடுதலைசெய்தார்.

மரவரி விகிதம்

1937-ம் ஆண்டு ஜனவரி 1௨ தொடக்கமாக யாழ்ப்பாணம் தீவுப் பகுதியிலும் பூநகரியிலுமுள்ள, கள்ளுச் சேர்க்கற்காகிய பனை தென்னைகளுக்குப் பின்வருமாறு வரிவிதிக்கப் படுமாம்.

இடம்	ஆண்பனை ரூபா	சதம்	பெண்பனை ரூபா	சதம்
நெடுந்தீவு		50	1	50
எழுவைதீவு		50	1	50
நயினாதீவு	1	50	5	00
பூநகரி	1	50	5	00
ஏனையபிரிவுகட்கு	2	50	10	00

தென்னைகள் விஷயத்திற் பெண்பனைக்கு விதிக்கப்பட்ட விகிதமே விதிக்கப்படுமாம்.

இணுவிலில் நடந்த கலக வழக்கு

எதிரிகளுக்குக் காவல் தண்டனை

"றேட்டுவழியாக மாட்டுவண்டியில் போகும்போது 2-ம் எதிரி மாட்டின் நாணயக்கயிற்றைப் பிடித்தான்".

சென்ற 7–5-56 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் இணுவிலில் வசிக்கும் (1) ஆறுமுகம் வேலாயுதம் (2) பொன்னையா நல்லதம்பி ஆகிய இருவருமாக அவ்வூர் (1) சின்னக்குட்டி நமசிவாயத்துக்கும் (2) சின்னக்குட்டி மாணிக்கத்துக்கும் (3) துரைசாமி கந்தையாவுக்கும் வாளால் வெட்டியும் பொல்லுகளால் அடித்தும் காயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி எஸ் கனகசபையும் எதிரி சார்பாகநியாயவாதி யோசேப்புவும் வாதித்தனர்.

சின்னக்குட்டி நமசிவாயம் கூறியதாவது:-

சென்ற கார்த்திகைமாதம் 16 ம் தேதி நான் பெரிய கடையிலிருந்து கோண்டாவில் றேட்டு வழியாக ஓர் மாட்டு வண்டியில் போகும் போது 2ம் எதிரியாகிய நல்லதம்பி எனது வண்டியிலுள்ள மாட்டின் நாணயக் கயிற்றைப் பிடித்து வழிமறிக்க 2 ம் எதிரி வேலாயுதம் ஓர் வாளால் என்னை வெட்டினர். அப்போது வண்டியில் (1) சின்னையா (2) அப்பாத்துரை (3 கந்தையா ஆகியவர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் வேளாளர். நாங்கள் பண்டாரங்கள். நான் சத்தமிட்டேன் அந்த நேரத்தில் எங்கேயோ நின்று வந்த மாணிக்கனும் கந்தையாவும் ஓடி வந்தனர். அப்போது 1 ம் எதிரி யை நீயும் வந்துவிட்டாயோ என்று கூறித் துரத்திச் சென்று 6 வெட்டுகள் வெட்டினர். கந்தையாவும் ஓடிச் சென்று எதிரியைத் தடுத்த போது அவருக்கும் ஓர் வெட்டு விழுந்தது மாணிக்கம் நிலத்தில் விழுந்ததும் எதிரிகள் இருவரும் ஒரு சயிக்கிளில் ஏறி ஓடி விட்டார்கள். இவர்கள் சயிக்கிளில் ஓடும் போது தான் அவ்விடத்துக்கு ஓடி வந்த சனங்கள் கல்லுகளால் எறிந்தனர். உடனே இச் சம்பவம் விதானைக்கு அறிவிக்கப் பட்டது இச் சம்பவம் நடக்கச் சில காலத்துக்கு முன், ஓர் விவாகத்திற்கு நாங்கள் போகாததாலேயே நல்லதம்பி வந்து வேலிகளை வெட்டி அழிவு செய்தார் இவர்கள் (எதிரிகள்) எனது சொந்தக் காரர்கள். 1ம் எதிரி எனது மகன். 2ம் எதிரி எனது மருமகன்.

குறுக்கு விசாரணையின் போது கூறியதாவது:–

முதலாம் எதிரி வேலயுதம் அளவெட்டியில் வசிக்கிறவன். 2 ம் எதிரி இணுவிலில் வசிக்கிறவன். எல்லோரும் பண்டாரங்கள். என்னுடைய தகப்பன் சின்னக்குட்டி. சின்னக்குட்டியின் முதல்தாரத்து மகனுக்கு ஆறுமுகம் என்று பெயர் எனக்கு நாகம்மா என்று ஒரு சகோதரியுண்டு நாகம்மாவுக்குச் சரஸ்வதியென ஒரு மகளுண்டு. இவளையே முதலாம் எதிரி விவாகஞ் செய்தான். இவ் விவாகம் சென்ற ஐப்பசி மாதமே நடைபெற்றது. எனக்குக் காமாக்ஷி என்று மற்றுமொரு சகோதரியுண்டு. இவள் திருக்கோணமலையில் வசித்தாள். இவளுடையபுருஷன் இறந்துவிட்டான். இவளுடைய மகனே துரைசாமி கந்தையா என்பவனாகும். சென்ற ஐப்பசி மாதத்தில் முதலாம் எதிரிக்குக் கலியாணம் நடந்தபோது நாங்கள் போகவில்லை. சென்ற கார்த்திகை மாதம் 8 ம் திகதி சகோதரி நாகம்மா எங்களுக்கு எதிராக விதானையாரிடம் ஓர் முறைப்பாடு சொல்லியிருக் கின்றார்கள் என்று எனக்குத் தெரியும். விசாரணையின் பின் நீதிபதி எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு முதலாம்எதிரிக்கு 18 மாதக் கடுங்காவல் தண்டனையும், 2ம் எதிரிக்கு 4 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்.

—நமது நிருபர்

நாச்சிமார் கோயிலடியில் சண்டை.

சென்ற 7 - 5 - 36 வியாழக்கிழமை இராத் தட்டாதெரு நாச்சிமார் கோவிலில் திருவிழாவுக்குச் சிற்றுண்டிகளும் சர்பத்துச் சோடா முதலியனவற்றை வியாபாரத்துக்காக வண்டியில் கொண்டுவந்து வைத்திருந்த லெட்சுமணன் ஆறுமுகம் என்பவனும் மலையாளியினிடம் கொக்குவிலில் வசிக்கும் சின்னட்டி கந்தசாமியென்பவர் பிட்டாய் வியாபாரியின் வண்டியையும் தட்டிக்கொட்டினதுமல்லாமல் அடித்துக் காயப்படுத்தினர் எனத் தெரிகிறது.

குறித்த எதிரி இவ்வியாபாரியிடம் சிகறற் கேட்டபோது அவர் சிகறெற்றைக் கொடுத்துவிட்டுக் காசைக் கேட்க அவர் இல்லையென்று வாதாடியதால் சண்டை மூண்டதாம். இச் சம்பவம் விதானையாரிடம் அறிவிக்கப்பட்டு மேற்படி சின்னட்டி கந்தசாமி என்பவர் உடனேயே பொலிஸ் ஸ்டேசனுக்குக் கொண்டு போகப்பட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் பருத்தித் துறையில் வசிக்கும் செல்லையா பொன்னுச்சாமி என்பவர் 9544 இலக்கமிடப்பட்ட பஸ் ஒன்றில் குறிக்கப்பட்ட தொகையிலும் 7 பிரயாணிகளைக் கூட ஏற்றியதாகக் குற்றஞ் சாட்டப் பட்ட வழக்கில் எதிரிக்கு 30 ரூபா அபராதமும் பஸ்ஸின் "வுட் வோர்ட்" பிரயாணஞ் செய்ததற்குப் பத்து ரூபா அபராதமும் விதிக்கப்பட்டன. — க. சி.

கடிதம்.

"நாமகள் வாசிகசாலைத் திறப்புவிழா."

"இந்துசாதன"ப் பத்திராதிபர் அவர்கட்கு

மேற்படி விழா நிகழும் தாது வருஷம் சித்திரை மாதம் உச-ந் திகதி (6-5-36). புதன்கிழமை சாயந்தரம் 7 மணியளவில் மயிலிட்டி தெற்கு ஐக்கிய வாலிப சங்க ஆதரவில் புதிதாயமைக்கப்பட்ட வாசிகசாலை மண்டபத்தில் கொண்டாடப் பட்டது.

அத்தருணம் மலர்மாலைகளாலும் தோரணங்களாலும் தீபங்களாலும் பொலிவுற்றிருந்த மண்டபத்தில் பன்னூற்றுக்கணக்கான ஜனங்கள் வந்து குழுமியிருந்தனர். மேற்படி சங்க நிர்வாகசபை ஒழுங்கின்படி பிரபல நியாயவாதி சி. ஆர். நல்லையா அவர்கள் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்து வாசிகசாலையினுல் கிராமம் அடையும் முன்னேற்றத்தைப்பற்றி ஓர் தெளிவான முன்னுரையைச் சுருக்கமாகப் பேசி வாசிகசாலையைத் திறந்து வைத்தனர்.

அதன்பின் தரும்பயிட்டிப் பிள்ளையார் கோவிலிலிருந்து ஊர்வலமாக மேளவாத்தியத்தோடு கொண்டுவரப்பட்டுச் சாலையில் நிறுவப்பட்ட சரஸ்வதி திருவுருவப் படத்திற்குப் பூசை நடந்தது. பின் மயிலிட்டிக் கோவிற்பற்றுக் கிராமச் சங்கத் தலைவரும், திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை அதிபருமாகிய திரு. சி. சுவாமிநாதன் பி. ஏ. அவர்கள் சபையோரது அங்கீகாரப்படி வாசிகசாலைக்கு "நாமகள் வாசிகசாலை" யென நாமமிட்டு "வாசிகசாலையில் ஆற்றவேண்டிய தொண்டு" என்னும் பொருள்பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு ஆற்றினர்.

பின்னர் கொக்குவில் மேற்கு, பண்டிதர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை யவர்களால் "கௌரி" சரிதம் பக்கவாத்திய சகிதமாய்க் கதாப்பிரசங்கம் சபையோர் குதூகலம் கொள்ளும்படி செய்யப்பட்ட பின், மயிலிட்டிதெற்கு மகாதேவ வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. பொ. பரமானந்தரவர்கள் குறிப்புரை கூறினர். சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றதும் கொண்டாட்டம் இரவு 11 மணியளவில் இனிது நிறைவேறியது.

இங்ஙனம்,
மா. சின்னப்பு,
சீ. வைத்தியலிங்கம்,
காரியதரிசிகள்

மயிலிட்டி தெற்கு,
9-5-36.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஹு
சித்திரைமீ ௨௯ திங்கட்கிழமை

இலங்கையிற் கொலைகள் அதிகப்படல். I

இலங்கைப் பொலிஸ்பகுதித் தலைவராகிய ஸேர். ஹேர்பேர்ட் டௌபிச்கன் சென்ற 1935 ம் ஆண்டிற்குரிய தமது பரிபாலன அறிக்கைப் பத்திரத்தை இப்பொழுது வெளியிட்டுள்ளனர். ஸேர். ஹேர்பேர் அவர்கள் சென்ற 1913-ம் ஆண்டு தொடக்கமாக இந்த ஆண்டுவரையில் அதாவது 22 வருட காலமாக இப்பதவியிலிருந்து கடமை பார்த்துவிட்டு இளைப்பாறித் தம் ஜன்மதேயத்திற்கு மீண்டு போகின்றாராதலின் குறித்த 1935-ம் ஆண்டுக்குரிய தமது பரிபாலன அறிக்கைப் பத்திரத்தை மிகவும் ஆராய்வாகவும் திட்பமாகவும் எழுதியிருக்கின்றார். இவ்விலங்கைத் தீவில் கொலைமுதலாங் குற்றங்கள் ஆண்டுதோறும் எவரும் அஞ்சத்தக்க விதமாக அதிகப்பட்டு வருகின்றதென்றும் இவைகளைத் தவிர்ப்பது கஷ்டமென்றும் கவலைப்பட்டு வரைந்திருக்கின்றார்.

குற்றங்களுட் பாரதூரமானது கொலைக்குற்றமாகும். இந்தப் பிரதானமான குற்றம் இவ்விலங்கையிற் போல் வேறு எந்நாட்டிலும் இக்காலத்து அதிகரிக்கவில்லையெனலாம். ஸேர் டௌபிச்கன் இலங்கைக்கு வந்து கடமை ஏற்றகாலத்தில் அதாவது 1913-ம் ஆண்டில் நடந்துள்ள மனுஷக்கொலை 175 ஆகும். ஆனால் சென்ற ஆண்டில் நடந்துள்ள கொலையின் தொகை 295 ஆகும்; கடந்த 22 வருடங்களுக்கிடையில் இலங்கையின் குடிசனத்தொகை அதிகரித்துள்ளதென்பது மெய். இந்த அற்ப சனமிகுதிகாரணமாகக் கொலையின் தொகை இவ்வளவு அதிகப்படலாமோ என்பதுதான் ஆசங்கைக்கு இடமானது. சென்ற ஆண்டில் நேர்ந்த கொலைகளுள் 140 கொலைகள் கத்தியினால் நேர்ந்தவை. 58 கொலைகள் பொல்லு குறுந்தடிகொண்டு செய்யப்பட்டவை. 39 கொலை துப்பாக்கிச் சூட்டினால் விளைந்தவை.

இனி, இக்கொலைகளின் காரணத்தைச் சொல்லுமிடத்தில் முந்திய ஆண்டுகளில் பெண்ணாசையினாலும் பெண்களின் நடக்கைப் பிசகினாலுமே பல கொலைகள் நேர்ந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால் இக்காலத்தில் பெண்ணாசை பெண்களின் நடைப்பிசகு என்னுமிவைகள் காரணங்களாயிருத்தலைக் காட்டிலும் மதுபான வெறியினால் நேருங் கொலைகளே அதிகமென்று சோ டௌபிச்கன் முறையிடுகின்றார். சென்ற ஆண்டில் நடந்த கொலைகளுள் 31 கொலைகள் மதுவெறிமேலீட்டினாற் செய்யப்பட்டவைகளாம்.

இந்த நாட்டிலே கொலை யதிகப்படுவதற்குப் பிரதானமான ஏதுக்கள் சிலவுள்ளன. கொலை செய்தவர்கள் சிலர் வருடந்தோறும் தக்க சாட்சியமில்லாமையினாலே நிரபராதிகளென்று தப்பிக்கொள்ளுதலும், அற்ப சிறைத்தண்டனை யடைதலும் ஆண்டுதோறும் அநுபவத்திற் காணப்படுவன. குற்றத்தை ருசுப்படுத்த முடியாமைக்குக் காரணம் போதிய சாட்சிகளில்லாமை; போதிய சாட்சிகள் இல்லாமைக்குக் காரணம், சாட்சியம் சொல்லப்போவோரைத் தலைமைக்காரரும் பொலிசரும் நியாயவாதிகளும் படுத்தும் சங்கடமாம். கொலைநேர்ந்த இடத்தில் அதனைக் கண்டவர் ஒருவர் இருவர் அகப்பட்டால், பொலிசர் அச் சாட்சிகளைப் பிடித்துக் கொண்டு போகும்விதமும் பொலிஸ்தானத்திலே நீதிஸ்தலத்தில் அவர்களைக் கட்டுப்படுத்தும் தன்மையும் அச்சுறுத்தும் இயல்பும் மிகவும் பயங்கரமானவைகளாகும். கொலை செய்தவனை எத்துணை ஆத்திரத்தோடு அகப்படுத்துகிறார்களோ, எவ்வளவு கட்டுக் காவலோடு வைத்து நடத்துகின்றார்களோ, எவ்வளவு அதிகமாக வெருட்டுகின்றார்களோ, அவ்வளவாகவே கொலை வழக்கிற் சாட்சியாகவுள்ளவரையும் பிடித்துக் கட்டுப்படுத்தி வெருட்டுகின்றார்கள் தலைமைக்காரரும் இப்படியே செய்கின்றனர். இனி, கொலைவழக்கிலே ஒருவன் சாட்சி சொல்லப் போனால் அக் கொலை சம்பந்தமாக, குறித்த சாட்சியைக் கேட்குங் கேள்விகளோடு மாத்திரம் நமது நியாயவாதிகள் விட்டு விடுவதில்லை. அவனுடைய குலம் கோத்திரம் சாதி பாரம்பரை அவர்களைப் பற்றிய நன்மை தீமைகள், அவன் பிறந்து புத்திபறிந்த நாட்டொடக்கம் சாட்சிசொல்ல வந்த நாள் வரையிற் செய்த தீமைகள் குற்றங்கள் குடும்ப விஷயப் பிருகச்சித்திரம் முதலியவைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஒன்றுந் தவறாமல் நியாயவாதிகள் கேட்கத் தலைப்படுவார்கள் பொலிசரும் நியாயவாதிகளும் சாட்சிகள் விஷயங்களில் இப்படிக் கடுமையாக நின்றால் யாராயினுஞ் சாட்சியஞ் சொல்ல முற்பட்டு வருவார்களா? இவை மாத்திரமா? இன்னமும் உண்டு, கொலை வழக்கிலாயினும்சரி, வேறுவழக்குகளிலுமாக ஒருவன் சாட்சியாகச் "சித்தாரிக்கப்" படுவனேல் அவன் எத் தொழிலைச் செய்பவனாயினுஞ்சரி, எவ்வகையான பொறுப்பு வாய்ந்த கடமையை வகித்துள்ளவனாயினுஞ்சரி, மூன்று மாச காலமோ, ஆறுமாச காலமோ, இல்லை ஒருவருடகாலமோ, அந்த வழக்குத் தொடங்கிச் சுப்பிறீங் கோட்டுத் தீர்ப்பு நடந்து முடியும் வரையில், சாட்சியாக வந்த அவன் தன் முயற்சிகள் கடமைகளையெல்லாம் கிரமமாகப் பார்த்தல் அசாத்தியமாகும். இதற்குப் பயந்து சாட்சியஞ் சொல்லப் பின்னிற்போர் பலருளர். இவைகளைத் தவிர, முகத்துக்கஞ்சிச் சாட்சியஞ் சொல்லாமல் மறைகின்றவர்களும் பொய்ச்சாட்சி சொல்வோரும் இடையிடையே உண்டு; ஆனால் இப்படியான சாட்சியாளர் குற்றத்தை நாம் அதிகாரிகள்மேற் சுமத்தலாகாது. கொலைக் குற்றவாளிகளைத் தவறாமல தண்டனைக்குள் ஆக்கவேண்டுமாயின், சாட்சிகட்கு மேலே சொல்லப்பட்ட சங்கடங்கள் கஷ்டங்கள் எல்லாம் இல்லாமல் நீக்குதற்கான ஏற்பாடுகளை அரசினர் செய்தல் வேண்டும்.

கொலைகள் அதிகப் படுவதற்கு இன்னொரு பிரதான நியாயம் இக் நாட்டிலே அரசினர் வருவாயை விரும்பிச் செய்து வரும் மதுபான விருத்தியாகும். இற்றைக்குப் பல வருடங்கட்கு முன் கொலை சிங்கள நாட்டிலேயே அதிகமாக விருந்து தமிழ்நாட்டிற் குறைவாக இருந்தது. என்றைக்கு அரசினர் உதவியினாலும் மதுபானிகளின் முயற்சியினாலும் இந்த யாழ்ப்பாணத்திலே தவறணைகள் அதிகப்பட்டனவோ அன்று தொடக்கமாகக் கொலையும் அதிகப்படலாயிற்று; மரவரி முறை யாழ்ப்பாணம் முழுவதும் இன்னுஞ் சில மாசங்களாற் கொள்ளப்படும். அந்த முறையும் வந்து சேருமாயின் இங்கே சோலை முதலாம் அநர்த்தங்கள் அதிகப்படுதற்கு ஏதும் இடையூறு உண்டா? மதுபானத்தைக் கைக்கொள்ளாதவர்களாகிய இஸ்லாம் மார்க்கத்தாருக்கிடையே மனுடர்க் கொலை மிகவும் அரிதாக இருக்கின்றதே,! யாழ்ப்பாணத்துள்ள சோனகதெருவிலே 30 வருடங்களுக்குப்பின் சென்ற வருடம் மாத்திரம் ஒரு கொலை நடைபெற்றது. சென்ற ஆண்டிலே நீதிபாசாகிய அக்பர், இஸ்லாமியனாகிய ஒரு கப்பற் காரன் கொழும்புத் துறைமுகத்தில் இன்னொரு கப்பற்காரனைக் குறித்துக் கொன்று விட்டானெனக் குற்றஞ் சாட்டப்பட்டு விளக்கத்திற்கு வந்த வழக்கிற் புகன்றதென்ன? "நான் சுப்பிறீங்கோட்டு நீதிபாசரான பின் இற்றைவரையில் ஒரு இஸ்லாமியனுக்கு மரணத் தீர்ப்பு விதிக்க நேர்ந்ததில்லை; நீயே முதன் முதல் வந்து சேர்ந்தாய்; இஸ்லாமியனுக்கு மரணத்தீர்ப்பு விதிப்பது எனக்கு மிகவும் அருவருப்பான கடமையாகும்." என்ற கருத்துப் படப் புகன்றார். அக்பார் புகன்றவற்றைக் கொண்டு நாம் அறியக் கிடப்பதென்ன? இஸ்லாமியரிடத்துக் கொலை அரிதினும் அரிதென்பதும் அப்படி யிருத்தற்குக் காரணம் அச்சாதியாரிடத்து மதுபானம் இல்லை என்பதுமாம். ஆனால் நமது அரசினரேனிலோ "தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி விடுவார்போல்" குடிவெறியை வருவாயை யிட்டு நாட்டிலே விருத்தி பண்ணிக் கொண்டு குற்றம் அதிகப்படுகிறது! அதிகப்படுகிறது!! என்று ஓலம் இட்டால் ஆவதென்ன? அரசினராகவே இவைகளையெல்லாம் யோசித்துக் குடிவெறி விருத்தியைக் கெடுத்து விடுவரேற் கொலை முதலிய குற்றங்களுங் குன்றத் தொடங்குமென்பது நிசம். குற்றங்கள் இலங்கையிற் காலந் தோறும் விருத்தியாதற்குள்ள ஏனைய ஏதுக்களை அடுத்த பிரசுரத்திலும் எடுத்துக்காட்டுவோம்.

இந்தியா-இலங்கை வர்த்தகம்

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே உள்ள தொடர்புகளோ மிகப் பலவாகும். நமது மூதாதையர்கள் இந்தியர்கள் ஆவர். நமது மதங்கள் இந்தியாவிலேயே உண்டாயின. நமது ஆலயங்கள் க்ஷேத்திரங்கள் ஆதியவை அதிகமாக அங்கேயே உள்ளன. நமது மொழியும் அங்கிருந்தே வந்தது. நமது பண்டைப் பெருமைகள் எல்லாம் இந்தியாவையே உறைவிடமாகக் கொண்டிருக்கின்றன. இவை தமிழ் மக்களுக்கு மாத்திரமல்லச் சிங்கள மக்களுக்கும் ஒத்ததே. என்னை? சிங்கள மக்களது மூதாதையரும் இந்தியாவிலிருந்தே வந்தனர்; அவர் மதமும் அங்கிருந்தே வந்தது ஆகலின், இந்தியாவையும் அதன் அயலிலுள்ள நமது இலங்கையையும் இத்தாலிக்கும் அதன் பக்கத்தே உள்ள ஸிஸிலித் தீவுக்கும் ஒருவாறு ஒப்பிடலாம். எவ்வாறு ஸிஸிலித்தீவு இத்தலியை வேறுபிரித்து ஒதுக்கிவிட்டு வாழ முடியாதோ அங்ஙனமே இலங்கையும் இந்தியாவோடு ஒற்றுமையின்றிப் பகைத்து வாழ்தல் முடியாதென்பது நமது கருத்து.

நிலைமை இவ்வாறாக, இலங்கை, தங்களுக்கே சொந்தமானது என்று கருதும் சிங்களக் கனவான்கள் சிலர், தங்கள் குறுகிய வகுப்புவாத மனப்பான்மையை இந்தியா விஷயத்திலும் காட்டத் தலைப்பட்டு நிற்கின்றனர். திரு. சேனநாயகா போன்ற தடித்த தீவிர வகுப்புவாதிகள், ஒருபோது இந்தியாவையும் இந்தியரையும் அலக்ஷியஞ் செய்தல் எளிதென்று கருதுகின்றனர் போலும். பொதுவாக இந்திய மக்கள் சம்பந்தமாகவும சிறப்பாக மலையாளிகள் சம்பந்தமாகவும் சிங்களவர்களிற் சிலர் நடந்து கொள்ளும் வகையைப்பற்றிச் சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற மலையாளிகள் சங்கக் கூட்டமொன்றிற் சொற்பொழிவாற்றிய கொச்சி சட்டசபை அங்கத்தவராகிய மிஸ்ரர். மத்யூ என்பார் மிகத் தெளிவாகக் கண்டித்துள்ளார். இலங்கைக்கு மலையாளிகள் வருதலே கூடாதென்று இலங்கையர் வற்புறுத்துவராயின் இந்தியரும் இலங்கைத் தெங்குப் பொருள்கள் இந்தியாவிற்குட் போய்ச் சேராமலிருக்க வேண்டும் என்று வற்புறுத்துவர் என்பதை அவர் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். சென்ற மார்ச் மாதம இலங்கையிலிருந்து 48,535 அந்தர் கொப்பரா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாயிற்று. இதில் 47,535 அந்தர் கொப்பராவை இந்தியா வாங்கிற்று. எஞ்சிய 1,000 அந்தர் கொப்பரா மாத்திரமே ஏனைய நாடுகளுக்குச் சென்றது. "இதோ! மலையாளிகளை இலங்கையை விட்டு ஓட்டுகிறேன்" என்று மார்புதட்டும் திரு. ஏ. ஈ. குணசிங்கா என்பார் இதனைச் சிறிது சிந்தித்துப் பார்ப்பாராக. இதுவேயுமன்றி, இந்திய வர்த்தகர் சங்கத்தின் தலைவராகிய திரு. சண்டிராமும் "இந்தியாவோடு தகுந்த வர்த்தக உறவை உண்டாக்கிக்கொள்ள இலங்கைக்கு இதுவே தகுந்த சமயம்" என்று கூறுவதும் குறிப்பிடத் தக்கது. மேற்கூறியவாறு மலையாளிகளை துரத்தப்பட வேண்டும் என்னும் கிளர்ச்சியும், இந்தியர்களைப் பாதிக்கும இதுபோன்ற ஏனைக் குறைகளும் நிவர்த்திக்கப் படாவிடின், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறும் வர்த்தகத்தில் முன்னேற்றம் ஏற்படாதென்பது வெளிப்படை. ஆகவே, வர்த்தக ஒற்றுமையை உண்டாக்க வேண்டுமேல், இந்திய இலங்கைமீதும் இலங்கை இந்தியாமீதும் கூறும் முக்கியமான குறைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து அவற்றை நடுநின்று சீர்தூக்கிப் பார்த்து அவற்றிற்கு நிவாரணஞ் செய்து ஒற்றுமையை உண்டாக்க வல்ல பிரதிநிதிகளைக்கொண்ட ஆலோசனைச் சபை ஒன்று நிறுவப்படுதல் வேண்டும.

இதுகாறும், அரசினர் இத்தகைய ஒரு சபையை நிறுவ முயற்சி செய்யாமல் விட்டமை கண்டிக்கத் தக்கதொன்றாம். கொப்பராவைப் பற்றிய விஷயம் மிக வேகத்தோடு ஆலோசிக்கப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இது விஷயமாகத் தென்னிந்தியாவில் ஆதியிலேயே கொப்பரா உற்பத்தி செய்து வந்தவர்கள் இந்திய அரசினர் கையாண்டுள்ள செயலில் திருப்தி அடைந்திலர். அதனால் அவர்கள் அங்கு கிளர்ச்சி செய்வதாகத் தெரிகிறது இலங்கை அரசினர், இந்தியாவிலிருந்து இலங்கையில் இறக்குமதியாகும் சில பொருள்களின்மீது வரியைக் கூட்டியதனபலனாக இந்திய வர்த்தகம பாதிக்கப்பட்டது மாத்திரமன்றி உணவுப் பதார்த்தங்களின் விலை அதிகமாக, அதனால் இலங்கையில் வாழும் இந்தியர்கள் கஷ்டத்திற்குள்ளாகவும் நேரிட்டு விட்டதென்பது அவர்கள் கூற்று. இலங்கை அரசினர் ஜப்பான் துணிகள்மீது வரியைக் கூட்டியதன் பலனாக இலங்கையில் இந்தியத்துணிகள் அதிகமாக இறக்குமதியாயின என்பது உண்மையே. ஆயின், இஃது இந்தியாவின் வேண்டுகோளினாலேனும் கிளர்ச்சியினாலேனும் ஏற்படவில்லை என்பதும் அவர்கள் எடுத்துக்காட்டும் நியாயமாகும். ஜப்பானிய துணிகள்மீது ஏற்படுத்தப்பெற்ற வரியோ, இலங்கை மக்களது விருப்பத்திற்கு முற்றும் மாறாக, குடியேற்றநாட்டு மந்திரியின் விடாப்பிடியான தூண்டுதலின்பேரிற் கொண்டுவரப்பட்டதாகும். ஆகலின், இதுவிஷயத்தில் இலங்கை இந்தியாவுக்கு உதவி புரிந்ததென்று கூற முன்வருதல் நீதியாகாது.

இதுவேயுமன்றி, இன்னும் சில விஷயங்கள் ஆராயப்படவேண்டியிருக்கின்றன. அவற்றுள், இலங்கைவாசிகளுக்கு வேலையளிக்கும் நோக்கமாக இலங்கைக்கு வரும் இந்தியத் தொழிலாளர்களின் தொகையைக் குறைக்க வேண்டும் என்னும் கிளர்ச்சியும் ஒன்றாகும். இலங்கையிலுள்ளவர்களுக்கு வேலையில்லாமல் இருக்கும்போது, பிற நாட்டவர்க்கு வேலை யளித்தலைக் குறைத்தல் வேண்டுமென்னும் கொள்கை நியாயமானதே ஆகும். ஆயின், இலங்கையைத் தமது வாசஸ்தானமாகக்கொண்ட இந்தியரைப் பாதிக்கக் கூடியதாகச் சமீபத்தில் நிலச்சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இதனாலும் இதுபோன்ற பிற காரணங்களாலும சிறுபான்மையினராகிய இந்தியமக்கள் பெரும்பான்மையோர்மீது அச்சமும் ஐயப்பாடும் கொள்ள நேரிட்டிருக்கிறது. தற்போது கையாளப் பட்டுவரும டொனமூர் அரசியல் திட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நீக்கிவைத்தமையும், சர்வசன வாக்குரிமையை அளித்தமையுமே அதிலுள்ள இரு முக்கிய அம்சங்களாகும். இவற்றைப் பெற்றபின்னரும, சிங்களக் கனவான்கள் தடித்த வகுப்புவாதப் பித்துக் கொண்டிருப்பார்களானால், அது முற்றும கண்டிக்கப்பட வேண்டியதொன்றே. இலங்கையின் முன்னேற்றத்திற்கும் சிறுபான்மையோரின் நலன்களுக்கும், நாட்டின விடுதலைக்குமாகவன்றோ பெரும்பான்மையோர் உழைத்து வருதல் வேண்டும? சிறுபான்மையோரது முழு நம்பிக்கையையும் பெறுதற்கன்றோ அவர் முயலுதல் வேண்டும? வகுப்புவாதப்பித்துக் கொண்ட சேனநாயகா கோஷ்டியாரும், திரு. குணசிங்காவும் இனியாயினும் பெருந்தன்மையாக நடந்து கொள்ளப் பழகிக்கொள்வார்களாக.

அரிமா நோக்கு.

ஸ்தானிகர் சீறுகிறார்

கல்கத்தாவில் ஓர் இத்தாலிய ஸ்தானிகர் இருக்கிறார். இத்தலி-அபிஸீனிய யுத்தம் நடந்து வந்த காலத்தில் இவர் இத்தலியரை மெத்தப் புகழ்ந்தும் அபிஸீனியரை இகழ்ந்தும் பிரசாரஞ் செய்து வந்தார். தற்போதோ இத்தலி தான் நடத்திய பேடி யுத்தத்தில் அபிஸீனியாவை வென்றுவிட்டது. நீதிக்கு மாறாக—புத்த தர்மத்திற்கு மாறாக—உலகம் அனைத்திற்கும் மாறாக—உண்மைக்கு மாறாக—ஆயுதமின்றி, ஆபத்துக்கு உதவுவோரின்றி அநாதரித்து நின்ற ஏழை அபிஸீனியரை இத்தலியர் வென்றமை கண்டு, நீதிக்காகவே தம வாழ்நாளை அர்ப்பணஞ்செய்துவரும் இந்திய இளைஞர் திலகமாகிய ஜவகர்லால் இம்மாதம் 9-ந் திகதியை இந்தியர்கள் அபிஸீனியா தினமாகக் கொண்டாடித் தமது அநுதாபத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று பத்திரிகை வாயிலாக ஜனங்களுக்கு அறிவித்திருந்தார். இதனைக் கேட்க மேற்படி இத்தலிய ஸ்தானிகருக்குச் சிறிது கசப்பாயிருக்கிறது. அவர் சீறுகிறார். 'இந்தியர்கள் ஏன் இத்தினத்தைக் கொண்டாடவேண்டும்? எதற்காக இத்தினம் கொண்டாடப் படுகின்றது? இத்தலியர் அடைந்த வெற்றியின் பொருட்டா அல்லது அவர்களால் அடக்கப்பெற்ற அபிஸீனியர்கள் பொருட்டா?" என்று சினந்து கேட்கிறார். இத்தலியரது வெள்ளைத்தனம உலகம் முழுவதுக்கும் வெள்ளையாகத் தெரிந்துவிட்டது. ஆதலால் ஊரை உலைமூடியால் மூட முடியாதென்பதை அறிந்து மேற்படி ஸ்தானிகர் வீணிற் குரைப்பதைவிட்டு வாய் வாளாமையை மேற்கொள்வாராக.

இருந்து பார்ப்போம்.

முசோலினி அநியாய யுத்தம் நடத்தி அபிஸீனியரைத் தோற்கடித்தமை மாத்திரமன்றி, மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுமாக, இனி எதியோப்பிய அரசே இல்லையாதலால், சர்வதேச சங்கத்தில் அதற்கு ஸ்தானம் இருத்தல் கூடாதென்றும் கேட்க ஆரம்பித்துவிட்டார். இதுவன்றோ நீதி? அபிஸீனியா இப்போது இவருக்குச் சொந்தம் என்பதை இன்னும் உலகம் ஒத்துக்கொள்ள வில்லையே. சர்வதேச சங்கத்தின் கொள்கைகளை அவமதித்து அநியாய யுத்தம் புரிந்த இத்தாலியர்களுக்குத்தான் அதில் ஸ்தானமிருத்தல் கூடாதென்பது நமது கருத்து. இதனை எந்த வல்லரசினரேனும் அச்சங்கத்தில் எடுத்துப் பிரஸ்தாபிப்பார்களா? அல்லது முசோலினிக்கு அஞ்சி வாய் வாளாமையை மேற்கொள்வார்களா? இதனை இருந்து பார்ப்போம்.

எப்பக்கத்திலும் இத்தலிக்கு எதிர்ப்பு

இத்தலி அபிஸீனியாவை ஜெயித்துவிட்டது சம்பந்தமாக எங்கும் பரபரப்பும் மனக்கொதிப்பும் ஏற்பட்டிருக்கிறது. எனினும் இத்தலியை அடக்க வழிதெரியாமல் ஒவ்வொரு நாடும் நடுங்குவதாகத் தெரிகிறது. அபிஸீனியாவுக்கு நேர்ந்த கதி தமக்கும் நேர்ந்துவிடக் கூடுமோ என்று பால்கன் நாடுகள் என்னும் சிற்றரசுகள் நடுங்குகின்றன. இத்தலியின் வெற்றியைப்பற்றி பிரான்சுக்கும் கொதி அதிகமாயினும் அச்சங் காரணமாக, அதைப்பற்றிப் பேசுவதை விடுத்து இப்போதைக்கு ஜெர்மனியிற் கவனம் செலுத்தினாற் போதும் என்று பிரான்சியர் தீர்மானித்து விட்டனர். அபிஸீனியாவுக்கு ஏற்பட்ட அவமானம் பிருத்தானியருக்கேற்பட்ட அவமானமே என்று பிரிட்டனிற் பிரதமமந்திரி உட்படச் சகலராலும் கருதப்பட்டாலும் அவர்களும் செய்வதின்னதென்று தெரியாமல் திகைக்கின்றனர். தென் ஆபிரிக்காவில் இத்தாலியருக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. யுத்த வெற்றிகொண்ட முசோலினியோ தன் சித்தத்திற் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றுவதிலேயே

பழையிற்கொலையா?

தண்டவாளத்திற் கண்டெடுத்த பிரேதம்

விசாரணையில் தெரியவந்த விநோத வரலாறுகள்.

(நமது நிருபர்)

சென்ற சனிக்கிழமை இரவு பழையிலிருந்து கொழும்புக்குப் புறப்படும் றெயில் இரவு 8-15 மணிக்கு பழை ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டுச்சென்றதும், தண்டவாளத்தின் மீது கழுத்து வைத்துப் படுத்திருந்த விதமாக இருந்த ஓர் உடலின் மீது றெயில் ஏறியதைக்கண்டதும் உடனே றெயில் நிறுத்தப்பட்டுப் பொலிஸாருக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. உடனே சப்-இன்ஸ்பெக்டர் வைமன் அவ்விடம் சென்றார். ஆயின், பிரேதத்தின் தலை றயிற் சில்லால் தறிக்கப்பட்டிருந்தபோதிலும் அந்த உடம்பில் இரத்தம் வடியக்காணப்படாமையினாலும் ஏனைய சில அடையாளங்களாலும் அது ஒரு கொலையாக இருத்தல் கூடுமென்னும் சந்தேகம் பொலிஸாருக்கு உண்டாயிற்று.

இறந்தவனைப்பற்றி விசாரணை செய்தபோது, இறந்தவன் ஓர் இந்தியத் தமிழன் என்றும், அவன் பெயர் முத்துச்சாமி என்றும் அவன் பழையைச் சேர்ந்த சங்கரன் அப்புக்குட்டியோடு வசித்தவன் என்றும் அன்று மாலை 4 மணியளவில் இறந்தவன் பண்டாரக் காத்தி வீட்டில் அப்புக்குட்டியோடும் அப்புக்குட்டியின் மனைவியோடும் கலகப்பட்டதாகவும் அக்காலத்தில் அப்புக்குட்டியும் மனைவியும் அவனை அடித்ததாகவும், அதன்பின்னர் இறந்தவனைக் காணக்கிடையாமல் இரவிலேயே றெயில் தண்டவாளத்தில் இறந்து கிடக்கக் காணக் கூடியதாக இருந்ததென்றும் தெரியவந்தது. பண்டாரம் காத்தியின் வீடு றெயில் ஸ்டேஷனிலிருந்து 200 யார் தூரத்திலுள்ளது. பொலிஸார் அவ் வீட்டை ஆராய்ந்து பார்த்தபோது அவ் வீட்டின் சமையலறைக்குள் இரத்தம் தோய்ந்த சாக்கொன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டெடுத்தனர். இன்னும் இரத்தம் தோய்ந்த ஒரு படுக்கையும் பாயும் காணப்பட்டன. இவையல்லாமல், சமீபத்தில் வெளுக்கப்பட்ட சீலைகள் சிலவும் இரத்தம் தோய்ந்திருக்கக் காணப்பட்டன. இது சம்பந்தமாக மேற்குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர். நீதிபதி பெலிக்ஸ் பேரல் அவ்விடம் சென்று விசாரணை நடத்தினர். எதிரிகள் அஜராக்கப்பட்டு இம்மாதம் 19-ந்திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சாவகச்சேரியிலுள்ள டக்டர் பிரேதத்தைப் பரிசோதனை செய்தபோது தறிபட்ட கழுத்தைத் தவிர பிரேதத்தில றெயிலோடு சம்பந்தப்படாத இடங்களிலும் முறிவுகளும் காயங்களும் காணப்பட்டனவாம்.

சீநிபதி, தங்கமுத்து, வேலுப்பிள்ளை, பாலுப்பிள்ளை என்னும் மூன்று சாக்ஷிகளை விசாரணை செய்து அவர்கள் கூறிய சாக்ஷியத்தை அறிக்கை செய்தார் இவர்கள் எதிரிகள் இறந்தவனை அடித்ததைத் தாம் கண்டதாகச் சாக்ஷியம் கூறினர்.

இறந்தவன் அப்புக்குட்டியின் வேலைக்காரனாக இருந்ததாகவும், அப்புக்குட்டியின் கட்டளைக்கு மாறாக, அவன் காத்தி வீட்டைவிட்டுப் புறப்பட்டது சம்பந்தமாகவே கலகம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது

கண்ணுங் கருத்துமாயிருக்கிறார். இன்று (திங்கட்கிழமை) சர்வதேச சங்கம் கூடும்போது சங்கத்தை அவமதித்த முசோலினி அதற்கு ஏதாவது சமாதானங் காட்டிவிட முயலுவாரென்பது கூறவும் வேண்டுமோ? சக்தியற்ற சர்வதேசசங்கம் இவர் செயலை எவ்வாறு மதிக்கும் என்பதுதான் கேள்வி. எதியோப்பிய அரசாங்கம் ஒழிந்து விட்டது என்பது இத்தாலியர்கூற்று. ஆயின், அபிஸீனியாவில் சக்கரவர்த்தியினால் நியமிக்கப்பட்ட மந்திரிகள் தாங்கள் இன்னும் அரசாட்சியை நடத்துவதாகவும் அபிஸீனியாவில் ஐந்தில் இருபங்கு நிலத்தை மாத்திரமே இதுவரை இத்தாலியர் கைப்பற்றியிருக்கின்றார்கள் எனவும் எஞ்சிய மூன்று பங்கும் தங்கள் ஆட்சியிலேயே இருந்து வருவதாகவும் லண்டன் பத்திரிகை ஒன்றுக்கு எழுதியிருக்கின்றார்கள். இதற்கு இத்தலியர் யாது பதில் கூறப்போகின்றனரோ? இதுவேயுமன்றி, பழைய அபிஸீனிய சக்கரவர்த்தியின் மருகர் 1,20,000 போர் வீரரோடு இத்தாலியருக்கு மாறாக அடிஸ் அபாபாவை நோக்கிப் படையெடுத்துச் செல்கின்றாராமே. இதற்கு முசோலினி என்ன சொல்லப்போகின்றாரோ?

மீண்டும் காடையர் தாண்டவமா?

சிலகாலமாக, மானிப்பாய் ஆனைக்கோட்டை ஆதியாம் இடங்களில் காடையர் குழப்பம் மிக அதிகமாக நடந்துகொண்டு வந்தது. இவர்கள் காடைத்தனத்தையே தமது பிழைப்பாகக் கொண்டுள்ளவர்கள் என்று கூடக் கூறலாம். இவர்கள் அக்கிரமத்தால் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளிகளும் பிறரும் கூடப் பல தொந்தரவுகளுக்குள்ளாக நேரிட்டுவந்தது. பக்கத்திலுள்ள கடைக்காரர் வழிப்போக்கர் ஆதியோர்கூட இவர்கள் அக்கிரமத்திற்கு ஆளாகாமலில்லை. அங்குள்ள விதானைமார்கள் இக் காடையருக்கு அஞ்சி உரியகாலத்தில் தத்தமக்குரிய கடமையைச் செய்யத் தவறிவிடுகின்றார்கள் என்றே கூறவேண்டும். மரியாதையாக நடந்துகொள்ளும் மக்களுக்கெல்லாம் அவசியமில்லாமல் தொந்தரவுகொடுக்கும் இக்கூட்டத்தவர்க்குத் தக்க தண்டனையளித்தல் அவசியம் என்பதை நாம் காலத்துக்குக் காலம் இப்பத்திகளில் எடுத்துக்காட்டி வந்தோம். இதன் பலனாக, மணியகாரன் அவர்கள் அதில் ஊக்கம் எடுத்துச் சில நன்மைகள் செய்துவந்தார்கள். அவர்களுக்கு நாம் நன்றிகூறுதல் அவசியமே ஆகும். ஆயினும் அக் காடையர் தாண்டவம் இன்னும் முற்றும் நீங்கியதாகக் காணவில்லை. சமீபத்தில் அங்கு ஒரு கடையில் நடந்த சம்பவமும் ஆனைக்கோட்டையில் விதானையோடு ஒருவன் செய்த சேட்டையும் இதற்குச் சான்று பகருகின்றன. இவர்களை அடக்குதற்கு விதானைமார்களால் முடியாதாயின், மானிப்பாயில் ஒரு பொலிஸ் நிலையத்தை ஏற்படுத்துவதே புத்தி என்பது எமது கருத்து. அஃதின்றி ஏழைப் பொதுசனங்கள் இவர்கள் அக்கிரமங்களுக்கு ஆளாகாமற் காக்கவேண்டியது தலைமைக்காரரின் கடனன்றோ? இதனைச் செய்ய முடியாவிடின் அவர்கள் எதற்காகத் தலைமைக்காரர் என்றிருக்கின்றார்களோ யாம் அறியேம்.

சிலாபப்பகுதியில் இருகொலை.

ஹெற்றிப்போலாப் பகுதியிலுள்ள மாண்டாவில்லா என்னுந் தோட்டத்துக் கண்டக்டர் ஒருவன் சென்ற வெள்ளிக்கிழமை மத்தியானத்தின் மேல் லேஸர் ஹென்றி டிமெல் அவர்களையும் அத்தோட்டத்தில் வேலை பார்த்த ரத்னநாயக என்பவனையும் துப்பாக்கியாற் சுட அவ்விருவரும் உடனே வீழ்ந்து இறந்தனராம். சுட்டவன் லேஸர் ஹென்றிக்குச் சொந்தமானவனும், தன்னை வேலையால் நீக்கிய வைரங்காரணமாகச் சுட்டான் என்று சொல்லப்படுகிறது.

பந்தோபஸ்து கைதியின் கஷ்டம்

150 நாளாக உண்ணா விரதம்

ஜவஹரின் தந்தி

அலகபாத், மே 5—

கிருஷ்ணகார் சிறையில் உள்ள பந்தோபஸ்துக் கைதியான ஸ்ரீமான் பிபல நாராயண மல்பக் 150 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவரது நிலைமை மிக கேவலமாக இருக்கிறது. அதனால் அவரது சகாயரும் நண்பர்களும் பண்டித ஜவஹர்லாலுக்குத் தகவல் அறிவித்தமையால் “அவர் பல நாட்களாக நீங்கள் உண்ணாவிரதமிருந்து வருவதைப் பொது ஜனங்கள் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். பந்தோபஸ்துக் கைதிகளின் கஷ்டங்களையும் உணர்ந்திருக்கிறார்கள். இனி உண்ணாவிரதத்தைத் தாங்கள் நிறுத்துவீர்கள் என நம்புகிறேன்.’ என ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார்.

பண்டித ஜவஹர்லால் இன்றுகாலை சுயராஜ்ய பவனத்தில் உள்ள மண்டபத்துக்குச் சென்று அங்கு பெரியதொரு புத்தகசாலையமைக்க ‘பிளான்’ போட்டார்.

அரசர் பிறந்த நாள்.

நமது அரச சக்கரவர்த்தியாகிய எட்டாம் எட்வேட் மன்னர் பிறந்த தினம் ஜூன் மாசம் 23-ந் தேதியாகும். வருகிற ஜூன் மாசந் தொடக்கமாக ஆண்டுதோறும் இந்தச் சுபதினம் பிரசித்த விடுதலைநாளாகக் கொண்டாடப்படும்.

அடிஸ் அபாபாவுக்கு வேறு படையெழுச்சி

பழைய அபிசீனியச் சக்கரவர்த்தியின் மருகர் 1,20,000 போர்வீரரோடு செல்கின்றார்

அபிசீனிய ராச்சியம் முற்றாக அற்றுப்போகவில்லை

அபிசீனிய சக்கரவர்த்தி வொல்ஸே என்னும் யுத்தக் கப்பல் தமக்குத் துணையாக வர, ஹெய்வ என்னும் துறைமுகத்தில் இறங்கினர்.

அபிஸீனிய ராச்சியம் முற்றாக அற்றுப்போகவில்லை.

அபிஸீனிய மந்திரியாகிய டக்டர் மார்ட்டின் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:—

“இப்பொழுது அபிஸீனிய அதிகாரம் அடியோடு இல்லாதொழிந்ததென்று பலர் நினைக்கின்றனர்; அப்படி நினைப்பது தவறு. அபிஸீனியாவின் மேற்குத் திசையிலுள்ள நாட்டை மந்திரிமாரே இப்பொழுது நிர்வகித்து நடத்தி வருகின்றனர். சக்கரவர்த்திக்குரிய பொருள்களும் அரசவரிசைகளும் அவர்கள் பொறுப்பிலேயே இருக்கின்றன. அபிஸீனியாவில் ஐந்தில் இரண்டு பங்கையும் இத்தலியர் கவர்ந்துவிட மூன்று பங்கும் அபிஸீனியர் அதிகாரத்திற்குள் இருக்கின்றது. அதன் உண்மையான நிலைமையை இப்பொழுது வெளியிட்டால் இத்தலியர் அங்கும் ஆகாய விமானிகளோடும் நச்சுப் புகைக் குண்டுகளோடும் வரத் தலைப்படுவர்.”

அபிஸீனிய “விபீஷணன்”

தன்னைச் சம்ரட்சணை செய்த சக்கரவர்த்திக்குத் துரோகஞ் செய்து இத்தலியரைச் சேர்ந்து அவர்கட்குத் துணைபுரிந்த ரூஸ் குக்ஸா என்பவனை இத்தலியர் ஒரு நாட்டிற்கு அதிபதியாக்குவரெனச் சொல்லப்படுகின்றது.

முஸோலினிக்குச் சன்மானம்

அபிஸீனியாவை வெற்றிகொண்டு நாட்டைத் தமக்குக்கீழ் ஆக்கியதன் பொருட்டு இத்தலிய அரசினர் முஸோலினிக்கு இப்போது உயர்ந்த பட்டமளித்து அவரைச் சன்மானித்தனராம்.

இத்தலியர் – பிரான்ஸியர் புகைரதப் பிணக்கு

அபிஸீனியாவுக்கும் பிரான்ஸிய சோமாலிலாந்திற்குமிடையே ஓடும் புகைரதம் பிரான்ஸியரின் ஆதிக்கத்திலுள்ளது. இக்தப் புகைரதவாயிலாக இத்தலியர் சைநியத்தையும் யுத்த கருவிகளையும் இப்பொழுது ஏற்றியனுப்பமுயன்றபோது பிரான்ஸிய புகைரத அதிகாரிகள் அதற்கு உடன்படாது தடுக்க, இதனால் இரு பகுதியாருக்குமிடையே பெருஞ் சண்டை நேர்தலாயிற்றாம்.

ஹரார் பகுதியிற் கொள்ளைக்காரர் கலகஞ் செய்தனர். ஆனால் இத்தலிய சைநியம் அங்குப் போய்க் கலகத்தை அடக்கிவிட்டது

ரூஸ்ஸேயம்

அபிஸீனிய சக்கரவர்த்தியின் உற்ற துணையும் சிறந்த சேனாதிபதியும் தேசாதிபதியுமாகிய ரூஸ்ஸேயம் இப்பொழுது இத்தலியருக்குக்கீழ்ப் படிந்து நடக்கலாயினர்.

ஜெருசலேமில் அபிஸீனிய சக்கரவர்த்தி.

9-5-36.

அபிஸீனிய சக்கரவர்த்தி அதிகாலையில் எழுந்து நடந்துபோய் அங்குள்ள பரிசுத்த ஆலயத்தில் முழந்தாளிட்டுப் பணிந்து கண்களில் நீர் ததும்ப வணக்கஞ் செய்தாராம்.

பின்னர் ஜெருசலேமிலுள்ள அபிஸீனியதானத்தில் 200 அபிஸீனியர் சமூகமாயிருக்கத் தாம் பறிகொடுத்த இராச்சியத்தை எவ்வாற்றாலும் மீட்கவேண்டுமென்று பிரமாணஞ் செய்தபோது அதனைக் கேட்டவர்களெல்லாரும் அழுதார்களாம்.

அபிஸீனியப் பழையசக்கரவர்த்தியாகிய மெனிலிக் என்பவருடைய மருகராகிய டாகத்தாகி என்பவர் அபிஸீனிய நாட்டை இத்தாலியரிடமிருந்து திருப்பிப் பிடிக்கும்படி 120000 போர்வீரரைக் கொண்ட சைநியத்தோடு அடிஸ் அபாபாவை நோக்கிப் படையெடுத்துச் செல்லுகின்றாராம்

புயலிற் சிக்கிய யாழ்ப்பாணப் பாய்மரக் கப்பல்.

யாழ்ப்பாணப் பாய்மரக் கப்பலொன்று நடுக்கடலில் புயலில் சிக்கித் தத்தளித்து இரங்கூன் துறைமுகத்தைச் சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று அடைந்ததாக ரங்கூன் செய்தியொன்று கூறுகிறது. பாய்மரக்கப்பல் மிகுந்த சேதமடைந்து விட்டதாகவும் தெரிகிறது.

சில வாரங்களுக்கு முன் அது அக்யாப்பை விட்டு 6500 மூட்டை அரிசியுடன் புறப்பட்டு இலங்கையை நோக்கிச் சென்றதாகவும் நடுவழியில் புயல் பலமாக வீசியதாகவும் தெரிகிறது. கடல் கொந்தளிப்பில் கப்பலும் ஊசலாடியது. அதனுடைய பாய்மரம் முறிந்துவிட்டது. 500 மூடை அரிசி கடலில் விழுந்துவிட்டது.

கப்பல் சிப்பந்திகளில் ஒருவர் இறந்து போனார். அவரது பிரேதம் கடலில் எறியப்பட்டது. மூன்று தினங்களுக்குக் கடலில் போராடியபின் புயலும் அடங்கியது. ஏப்பிரல் 21, 22, 23ம் தேதிகளில் கப்பல் பட்டபாடு சிறிதல்ல, புயலும் 72 மணிநேரம் விடாமல் வீசியதாகக் கப்பற் சிப்பந்திகள் கூறுகின்றனர். கப்பலைச் சரிக்கட்ட ஐந்து மாதங்கள் பிடிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடைவுநகை விற்பனவுவிளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுரோட்டு மூத்ததம்பி செல்லத்துரை என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டுத் தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

நம்.	உ.	ரு.	பெயர்	ஊர்	நகைவிபரம்
1934-ம் ஆண்டு ஆகஸ்டுமீ					
8913	11	10	இ செல்லையா	ஆரியகுளம்	½ பவுண் 1 மோதிரம் 3
8964	17	75	வ கணபதி	புழுக்குதறிதோட்டம்	அச்சக்காப்பு 2
8994	20	7	நா வன்னி	அம்மைஆஸ்பத்திரியடி	½ பவுண் சுட்டோலை
9012	29	8	மு சொக்கலிங்கம்	ஆரியகுளம்	ஓலை 2
1934ம் ஆண்டு செப்டெம்பர்மீ					
9096	4	76	க கனகசபை	நீர்வேலி	அச்சக்காப்பு 2
9109	7	15	க செல்லன்	ஆரியகுளம்	காப்பு 2
9135	10	20	மு பொன்னு	ஆரியகுளம்	கவுதோர் 1
9162	13	14	சி துரையப்பா	அரசடி	கடுக்கன் சோடி 2
9207	17	15	ப. ஆறுமுகம்	ஆரியகுளம்	ஓலை, வாளி
9224	20	6	சி கந்தையா	கச்சேரியடி	கவுதோர் 1
9272	27	30	அ ஆறுமுகம்	ஆரியகுளம்	முத்து புரோச்
9273	27	15	அ ஆறுமுகம்	ஆரியகுளம்	மோதிரம் 1
1934-ம் ஆ. அக்டோபர் மீ					
9313	4	10	மூ மாதன்	சிறும்பியடி	ஓலை 2
9324	6	16	பொ துரையப்பா	சிறும்பியடி	ஓலை 2 குச்சு 2
9327	6	80	வ முதலித்தம்பி	சேணியதெரு	முறச்சுக்குதறி அட்டியல் பதக்கத்தோடு
9352	9	48	ஆ ஆறுமுகம்	ஆரியகுளம்	அச்சு காப்பு 2
9379	14	10	ஐ சபாபதி	புழுக்குதறித்தோட்டம்	ஓலை 2
9393	15	10	அ காசிகேசு	இணுவேலி	வெ கடுக்கன் 2
9397	15	8	க சின்னத்தம்பி	சிறும்பியடி	ஓலை 2
1934-ம் ஆ. நவம்பர்மீ					
9677	25	105	அ ஆறுமுகம்	ஆரியகுளம்	தாலிகொடி 1
1934ம் ஆண்டு டிசம்பர்மீ					
9805	17	7	த செல்லையா	சேணியதெரு	மோதிரம் 1
9814	19	10	செ முத்து	ஆரியகுளம்	சிறுபதக்கம்
9815	,,	20	க கணபதிப்பிள்ளை	சேணியதெரு	மோதிரம் 2
1935ம் ஆண்டு ஜனவரிமீ					
9932	6	45	மு வேலுப்பிள்ளை	கைதடி	சங்கிலி, ½ பவுண்
9971	12	10	சி அப்புத்துரை	நல்லூர்	தாலி 1
10009	18	15	ம யோசேப்பு	ஆரியகுளம்	சிறுகாப்பு 2
10015	19	9	செ ஐயாத்துரை	ஆனைப்பந்தி	ஓலை 2
1935ம் ஆண்டு பெப்ரவரிமீ					
10160	10	15	ப சண்முகம்	ஆரியகுளம்	ஓலை 2
10192	13	12	சி கந்தையா	நாவற்குளி	ஓலை 2
10202	14	8	வே வைத்தியலிங்கம்	செட்டித்தெரு	மோதிரம் 2
10223	18	62	வே கனகரத்தினம்	ஆரியகுளம்	மு அட்டியல 1
10270	25	6	நா பெருமாள்	பெருமாள்கோவிலடி	கல்மோதிரம் 1
1935-ம் ஆ. மார்ச் மீ					
10285	1	15	மு மயில்வாகனம்	ஆனைப்பந்தி	மோதிரம் 1
10307	4	75	K சுந்தரமூர்த்தி	தெல்லிப்பழை	மோதிரம் 3 சங் 1
10320	6	8	சி கந்தையா	நாவற்குளி	ஓலை 2
10329	9	13	சி சுப்பிரமணியம்	ஆரியகுளம்	கல்மோதிரம் 1
10379	16	12	வி சிவசங்கரன்	ஆனைப்பந்தி	கல்மோதிரம் 1
10407	21	87	வ சின்னத்துரை	ஆரியகுளம்	சங்கிலி 1
10408	21	10	மு பொன்னம்பலம்	உரும்பராய்	பதக்கம் 1
10453	21	100	த இராசரெத்தினம்	கச்சேரியடி	சங்க
10459	30	8	வி சோமசுந்தரம்	பெருமாள்கோவிலடி	ஓலை 2
10466	30	75	வே கனகலிங்கம்	ஆரியகுளம்	சங்கிலி அட்டியல் பதக்கம்

விற்பனவு தாது௵ வைகாசிமீ 11-ந் தேதி (24-5-36) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகெலாக மீதி மேற்படியார் வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

சி. ஐயம்பிள்ளை உடையார்
வெந்தின் மேஸ்தர்

(Mis. 28, 11 & 14-5-36.)

நவீன சிசு உற்பத்திமுறை

ஆண்குழந்தைகள் மாத்திரம் பிறவாவாம்

முயல்கள்மீது செய்த பரீக்ஷை முயற்சியால் அடைந்த பலன்

ஆணுடைய உதவியோ, அவனுடைய ஜீவக் கிருமியோ இன்றியே சிசு உற்பத்தி செய்யவும். பலஹீனமான ஸ்திரீகளுக்கேற்படும் கர்ப்பத்தை பலமுள்ள ஸ்திரீகளுக்கு மாற்றிப் பிரஸவிக்கச் செய்யவும் அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கும் புதிய முறைகளின் விவரம் இக்கட்டுரையில் அடங்கியுள்ளது.

இரண்டாண்டுகளுக்குமுன் அமெரிக்க விஞ்ஞானிகள் சிலர் சேர்ந்து "டெஸ்ட் டியூப்"களில் இரட்டைக் குழந்தை உற்பத்திசெய்து காட்டினர். இவ்விஷயம் பலருக்குத் தெரிந்திருக்கக்கூடும். அந்தச் செயற்கைச் சந்தானவிருத்தி வேலையை விஞ்ஞானிகள் மேலும் தீர ஆராய்ச்சி செய்துகொண்டே வந்தார்கள். டெஸ்ட் டியூபில் சிசு உற்பத்தி செய்ய ஸ்திரீயின் [illegible] ஆணின் விந்தும் அவசியம். ஜீவக் கிருமியின் சேர்க்கையின்றி டெஸ்ட் டியூபிலும் குழந்தை உற்பத்திசெய்ய முடியாதிருந்தது. ஆனால் இப்போது ஹார்வர்டு சர்வகலாசங்க ஜீவ தத்துவ இலாக்காவைச் சேர்ந்த டாக்டர் கிரிகோரி பிங்கஸ் மேலும் நீடித்த ஆராய்ச்சி செய்து பல புதிய விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்.

இதுவரை டாக்டர் கிரிகோரி பலவிதமான ஆராய்ச்சிகளையெல்லாம் முயல்கள்மீது செய்து பரீட்சை பார்த்திருக்கிறார். அவை மனிதர்களுக்கும் செய்யப்படலாமென்பது அவர் துணிபு முயல்களின் மாட்டு ஆண்முயலின் ஜீவக் கிருமியை "இன்செக்ஷன்" செய்து கருத்தரிக்கச்செய்யும் ஆராய்ச்சியில் டாக்டர் கிரிகோரி இறங்கியபோது, ஆண் ஜீவக் கிருமியில்லாமலே முயன்று பார்க்கவேண்டுமென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது உடனே அப்படியே செய்து பார்த்த அம்முயற்சியில் வெற்றி பெற்றார்.

அவருடைய ஆராய்ச்சியை இருவகையாகப் பிரிக்கலாம்; அவர் ஒரு பெண் முயலின் கழுத்து நரம்பில் மின்சாரச் சக்தியை யூட்டி "பிட்டுவைடரி" கோளத்திலிருந்து "புரோலன்" என்ற சத்து வெளிப்படும்படி செய்தமை ஒன்று மற்றது புரோலனால் பலப்படுத்தப்பட்ட முட்டைக் கோளத்தை வெளிப்படுத்தி, அதை எடுத்து உப்புக்கலவையில் ஊற வைத்தபின் 113 பரன் ஹீட் அளவுக்கு அது உஷ்ணமாக்கப்படுவதாலாகும். அதன்பின் அந்த முட்டைக்கோளம் மற்றொரு பெண் முயலின் கருப்பையில் இணைக்கப் பட்டுவிட்டது. அம் முட்டைக் கோளத்திலிருந்த முட்டைகள் கருவாகி நன்றாக வளர்ந்து பிறகு குட்டிகளாகப் பிறந்தன.

ஆண்குழந்தைகள் உண்டாகா?

இவ்வண்ணம் டாக்டர் கிரிகோரி ஆணுதவியின்றியும், டெஸ்ட் டியூபிலுமாகச் சிசு உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டார் ஆனால் இதில் ஒரு குறை இருக்கிறது. ஆணுதவியேயில்லாமல் வெறும்பெண்முட்டைகளை மின்சாரசக்தி யூட்டிக் குழந்தை பெறச் செய்வதால ஆண்குழந்தைகளை பிறக்க வழி கிடையாது.

முயல்களிடம் கையாண்ட இதே முறையை மனித வர்க்கத்தினரிடம் கையாளலாம் என்று டாக்டர் கூறுகிறார். "மனிதவர்க்கம் இம்முறையைக் கையாண்டால் ஸ்திரீகளுக்குப் பாதகாப் பதிகமாயிருக்கும் மெலிந்த தேகமுடைய ஸ்திரீ கருவுற்றுவிட்டால், அக் கருவைப் பலமுள்ள மற்றொரு ஸ்திரீயின் கருப்பையின் இணைத்துவிடலாம். அப்படி ஒருத்தி வயிற்றில தரிக்கும் கருவை மற்றொருத்தி வயிற்றிற்கு மாற்றுவதால், குழந்தையின் குணம் எந்தத்தாயின் வயிற்றில் தரித்ததோ அவளது குணங்களுடையதாகத்தானிருக்கும். பிறகு கருவை வளர்த்துக்கொண்டே வருபவளின் குணங்கள் அக்குழந்தைக்குச் சிறிதும் இருக்காது அத்தகைய குழந்தை கருத்தரித்த தாயைப் போலவே, குணத்திலும் தோற்றத்திலும இருக்கும. ஆனால் ஆண்குழந்தை மட்டும் பிறக்காது" என்று டாக்டர் கிரிகோரி கூறுகிறார்.

—(தா இ)

மீண்டும் மானிப்பாயில் காடையர் தாண்டவம்

சிகறெற்கடைக்காரனோடு சேட்டையும் கத்திக்குத்துமா?

ந. நி

சென்ற 7-5-36. வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் மானிப்பாயில் வசிக்கும் முருகேசு நாகலிங்கம் என்பவர் அவ்வூரில் கடைவைத்திருக்கும் கோபால பிள்ளை என்பவரைக் கத்தியால் மார்பிற் குத்திக் காயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது

கோபாலபிள்ளையின் கடையில் நிற்கும் கந்தையா இராசையா என்னும் 16 வயதுச் சிறுவன் கூறியதாவது:—

சென்ற 5-ம் திகதி எனது முதலாளி யாழ்ப்பாணம் பெரியகடைக்குச்சென்றிருந்தார். அன்று 10 மணியளவில் எதிரி கடைக்குவந்து சிகறெற கேட்டார். நான் கொடுத

டுக்கவில்லை. திரும்ப அன்று 12 மணிக்குத் திரும்பிவந்து திரும்பவும் சிகறெற் கேட்டார். நான் கொடுக்க மறுத்தேன். அவர் எனது மேசை இலாச்சியைத் திறந்து சிகறெற்றில் சிலவற்றை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். எனது முதலாளி சாயந்தரம் 6மணி வரையில்தான் வந்தார் நான் அவர் வந்ததும் இச் சம்பவத்தைச் சொன்னேன். அவர் வெளியே சென்று விட்டுத் திரும்பக் கடைக்கு வந்தபோது இவ் வெதிரியும் பின்னே வந்து முதலாளியின் மார்பில ஓர் வில்லுக்கத்தியால் குத்தினர். எதிரிக்கு 14-5-36-ந் திகதிக்கு [illegible]விடப்பட்டிருக்கிறது.

இவ் வெதிரி முன்னோர் வழக்கில 6 மாத மறியல் தீர்க்கப்பெற்றவன.

திருக்கதிர்காமவரலாறு

பலவளங்கள் நிறைந்ததும் நாற்புறமும் ஆழியாற் சூழப்பட்டதுமாகிய இவ்விலங்கா தீவின்கண் திருக்கதிர்காம மெனும் பூர்விக புண்ணிய முருகக்ஷேத்திரமொன்று உளது. இத்திருக் கதிர்காமத்தையே பண்டைய பக்தர் குழாங்கள் சோதிஸ்காமம் எனவும் ஏமகூடமெனவும் பாடியேத்திப் புகழ்ந்து கொண்டாடினர்.

இத்திருக் கதிர்காம புராண வரலாற்றை இங்குச் சிறிது சுருக்கிக் கூறுதும். சூரபதுமன், சிங்கன், தாரகன் என்னும் அசுரர்கள் சிவபெருமானை நோக்கிச் செய்த கடுந் தவப்பேறாய்ப்பெற்ற ஒரு பெரு வரத்தால் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக அரசு புரிந்து வந்தனர். இவர்கள் அரசுபுரியுங்கால் தேவலோகத்திலுள்ள அரி, பிரமன், இந்திரன் முதலாகிய அமரரைச் சதா சகிக்கொணாத் துன்பசாகரத்திற் சலிக்கச் செய்தனர். தேவர்கள் இக்கொடுமையைச் சகிக்க இயலாமலும் புகலிடம் பிறிதின்மையாலும் வருந்தினர். அப்பால் 'சர்வலோக தயாநிதியாகிய எம் இறைவனே! நம்மைக் காக்க வல்லவன்' என மனதில் உறுதிகொண்டு அவ்வரனுர்பாற் சரண்புகுந்தனர்.

அவ்விண்ணுலக வாசிகளை இரட்சிக்கும் பெருமித இரக்கங்கொண்ட அக் கைலாசபதிக் கிருபாநிதி எவர்க்குந்தான் நன்றுடையானேயன்றித் தீயதில்லான் என்பது எளிதிற் புலப்படுமாறு தம் நெற்றித் திருக்கண்ணினின்றும் ஆறு அருட்சோதிப் பிரகாசப் பொறிகளை யுண்டாக்கினர். இவ் வாறு திருப்பொறிகளும் சரவணப் பொய்கையில் ஆறு திருமகவாய் வளர்ந்து சண்முக மூர்த்தியாய்ச் சிவபிரானுக்கும் உமாதேவியாருக்கும் உவந்த மதலையாக வளர்ந்து வந்தன. இவர் இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருநாளில் தேவர்கள் அச்சிவசுப்பிரமண்யக் கடவுளைத் தாம்படு மிடுக்கணினின்றும் காத்தருளும்படி சிவசம்புநாதர் தமக்கு ஆஞ்ஞாபித்த பிரகாரம் பிரார்த்தித்து விண்ணப்பஞ் செய்தனர். சண்முகப்பெருமான் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி அசுரர் குலத்தை அடியோடு அழிக்கத் திருவுளங்கொண்டு வீர பூத அமராதியோர் புடைசூழ அங்கு நின்றும் நீங்கித் திருச்செந்தூர்ப் பதியை யடைந்து அங்குச் சிலகாலம் கோவில் கொண்டருளியிருந்து சூரபதுமனிடம் வீரவாகு தேவரைத் தூதாக அனுப்பினர்.

வீரவாகுதேவர் தூதாகச் சென்று சற்போத உபதேசஞ் செய்தும் அவ்வசுரர்கள் கோடிறும் பேதையும்போல் தாம் கொண்டது விடாமைகண்டு இலங்காபுரியை நோக்கிவந்து இத்திருக்கதிர்காமத்தில் விசுவகர்மாவினால் வகுக்கப்பெற்ற பாசறையில் வீற்றிருந்து அசுரர் எல்லோரையும் கொன்று சூரபதுமனையும் அவன் முன் விரும்பிக் கேட்டவரப்படி சேவலும் மயிலுமாகத் தடுத்தாட்கொண்டு அமரரை அகமகிழச் செய்து சயந்தன் முதலானோரையும் சிறையினின்றும் மீட்டு விண்ணுலகை வாழ்வித்தனர். பின் அமரர் வேண்டுகோட்படி நவ கங்காதீர்த்தத்தை உண்டு பண்ணிப் பின்னர் விசுவகர்மாவினால் வகுக்கப்பெற்ற ஓர் ஆலயத்தில் நவரத்தின பொற் சிங்காசனத்தில் அன்றலர்ந்த செந்தாமரை போன்ற வதனங்களுடன் சிலகாலம் வீற்றிருந்தனர்.

சிலகாலம் சென்றதும் எம் சண்முகப் பெருமான் யாவரோடும் திருப்பரங்குன்றஞ் சென்று தெய்வநாயகியம்மையாரைத் திருமணம் புரிந்து அப்பால் வள்ளிமலையை அடைந்து அங்கு வள்ளிநாயகியாரைப் பெருமணமுடித்து ஆங்குச் சிலகால் தங்கிப் பின்னர் முன்பு தமக்கு மிகப் பிரீதிகரமாயுள்ள திருக் கதிர்காமக்ஷேத்திரத்துக்கே எழுந்தருளி ஆங்கு உண்டான தமது ஆலயத்தில் வீற்றிருந்தருளினர்

இங்ஙனம்,
நா. இராசதுரை.

விதானையோடும் சேட்டையா?

ஆனைக்கோட்டையில் நடந்தசம்பவம்

சென்ற கிழமை ஆனைக்கோட்டைப் பொலிஸ் விதானை ரோட்டால் போகும்பொழுது ஷை ஊர் நாகமணி சரவணமுத்து என்பவன் விதானையாரின் சட்டைச் சாக்கிலிருந்த "டயறி"ப் புத்தகத்தை எடுக்க எத்தனித்தபோது விதானையார் கண்டு தடுத்து விட்டதாகவும் அப்போது விதானையாருக்கும் அவனுக்கும் இடையில் சச்சரவு நடந்ததாயும் அறியக் கிடக்கின்றது. இச் சம்பவம் உடனே பொலிசுக்கு அறிவிக்கப்பட்டு பொலிசார் மேற்படி சரவணமுத்தனைத் தேடித் திரிகிறார்களாம. விதானையாருடன் இவ்விதமான சேட்டைகள் செய்யும் பேர்வழிகள் மற்றும் ஏழைச் சனங்களை எவ்விதந் துன்புறுத்துவார்களென்பது சொல்லாமலேகிரகித்துக்கொள்ளத்தக்கது.

பூமிதிருத்துவது பாவமெனக் கருதப்படும புண்ணியஸ்தலம்.

ஆனிமாதம் வளர்பிறை 10-ந் திகதி சிவலிங்கத்திற்காகப்போன ஹனுமான்

(மோடேண் ரிவியூவிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது)

இராமேஸ்வரம் அல்லது தேவநகரம் இந்தியாவின் தென்கிழக்குக் கோடியில் வங்காளக் குடாக்கடலில காணப்படும் ஒரு சிறு தீவாகும். இதனைப் பாம்பன் என்ற கால்வாய் இந்தியாவை விட்டுப் பிரித்து விடுகிறது.

இராமேஸ்வரம் தீவின் நீளம் (தென் வடக்காக) ஒன்றரை மைல் அகலம் அரை மைல்- தனுஷ்கோடிக்குச் செல்லும் எஸ். ஐ. ஆர்; வண்டி பிரயாணிகளை இங்கு இட்டுச் செல்லும்.

இராமேஸ்வரம் புனிதமான ஓர் பூமியென்றும் வேளாண்மைக்காக உழுவது பாவமென்றும் கருதப்படுகிறது. அங்குள்ள ஆலயத்தின் மத்திய (முக்கிய) லிங்கம் ஸ்ரீராமனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாம். ஆகவே எந்த வகுப்பு இந்துக்களும் அதனைப் போற்றுகிறார்கள், இராவணனைக் கொன்றழித்து விட்டு ஸ்ரீராமன் திரும்பி வந்தபோது பல மகரிஷிகள், கொலைசெய்த பாவம் தீரும்படி ஓர் லிங்கத்தை வணங்குமபடி சொன்னார்களாம. ஆகவே மேற்படி லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாம்.

இராமேஸ்வரத்தில் மகோததி (Bay of Bengal) இரத்னாகரா (The Indian Ocean) ஆகிய இரண்டும சந்திப்பதால் அது ஸ்நானத்திற்கு உத்தமமான இடமெனக் கருதப்படுகிறது.

திருடனின் உருவம்

சிவலிங்கத் (மூல விக்ரகம்) தின் முன்பாகவிருக்கும் நந்தியின் இருபக்கங்களிலும் ரத்னாகரா, மஹோததி ஆகிய இருகடலின்தேவதைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர ஒரு மனிதஉருவம பாதி மண்ணில் புதைந்த நிலைமையிற் காணப்படுகிறது. இது ஒரு திருடனின் உருவமாம். இந்த வலவாறு ஒருவன் கோவிற் பொக்கிஷத்தைத் திருடிக் கொண்டு ஓடப் பார்த்ததாகவும் உடன் கடவுள் கோபத்தால் மண்ணில் புதைந்து கல்லாகி விட்டதாகவும் சொலலப்படுகிறது.

ஹனுமான் கோபம்

பிரதிஷ்டைக்காகச் சிவலிங்கம் கொண்டுவரும்படி ஹனுமானை மகாமேரு நோக்கி அனுப்பினார்களாம். அவர் திரும்பி வருவதற்குச் சிறிது பிந்திவிட்டதால் சீதாதேவி கடல் மணலினால் ஒரு லிங்கத்தைச் செய்து பிரதிஷ்டை செய்து விட்டாராம. அப்படியிருக்க ஹனுமான் சிவலிங்கத்துடன் வந்தார். வந்து தமது தாம் ஏமாற்றப்பட்டிருப்பதைக கண்டு கோபம கொண்டு, சீதை நிறுவிய விக்ரகத்தை உடைத்தெறியப் பார்த்தார்; முடியவில்லை. அப்போது ஸ்ரீராமன் தலையிட்டு ஹனுமானின் கோபத்தைத் தணித்து, அவர் கொணர்ந்த லிங்கத்தைச் சற்றுவடக்காகப் பிரதிஷ்டை செய்து அதற்கு முதலில பூஜை செய்யும்படியாகக கட்டளையிட்டாராம.

(ஹனுமான் சிவலிங்கத்திற்காகப் போன நாள் ஆனி மாதம் வளர்பிறை 10-ம் நாள்)

தனுஷ்கோடி

இராமேஸ்வரத்தின் முக்கியமான ஸ்நான கட்டடம தனுஷ்கோடி. இது இராமேஸ்வரத்திலிருந்து 15 மைல் தெற்காகவிருக்கிறது. இதில் எந்த நாளையிலும் ஸ்நானம செய்யலாம. பலவிதமான நோய்கள் தீர்ந்து விடுவதாகச் சொல்லப்படுகிறது.

தனுஷ்கோடியைத தவிர வேறு பல தீர்த்தங்களும இருக்கின்றன. அவற்றில் சில குளங்களும சில கிணறுகளும் ஆகும்; அவைகள் பெரும் பாலானவையும (இராமேஸ்வரம) ஆலயத்தைச் சுற்றியுமிருக்கின்றன. முக்கியமாக 24 தீர்த்தங்கள் தான [illegible]படுகின்றன பல நோய்களைத் தீர்க்கும் சக்தி பெற்றிருக்கின்ற

சுமார்900 அடி நீளமும்700 அடி அகலமும்சகலமும் பெற்ற மூன்று பிரகாரங்களுடனிருக்கும் ஆலயம் சிமயச்சிற்ப வேலைப்பாடு அமைந்ததாகும். இதற்குச் சேதுபதி ராசர்கள் ஏராளமான பணத்தை வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்வேதமாதவன் (சேதுமாதவன்) என்ற கடவுள் வெண்சலவைக் கல்லிற் செய்யப்பட்டு, இராமேஸ்வர ஆலயத்தின் வடக்காக ஒரு மைல் தூரத்திலிருக்கிறது. இதனைக் கடைசியாக வணங்கி முடிக்கவேண்டுமாம். காரணம் இந்தத் தேவதைதான் இராமேஸ்வரத்தின் காப்புத் தெய்வம்.

மற்றைப் புண்ணியஸ்தலங்கள்.

இராமேஸ்வரம் நீங்கலாக சுற்றுப் பக்கங்களிலிருக்கும் வேறு சில புண்ணிய பதிகள் தேவிபட்டணம் அல்லது நவபாஷாணம், திருப்புல்லாணி அல்லது தர்ப்பசயனம் முதலியனவாம்; திருப்புல்லாணியில் ஸ்ரீராமர் புல்லினால் படுக்கை செய்து அதில் வருணதேவன் வருகைக்காகக் காத்திருந்தாராம். இப்போது அங்கு வருண விக்ரகம் நிறுவப்பட்டுள்ளது பக்கத்தில் ஸ்ரீராமவிக்ரகம் படுத்திருக்கிறது.

நவ பாஷாணத்தில் மஹிஷாசுரமர்த்தனி ஆலயம் இருக்கிறது. அதோடு ஸ்ரீராமன நவக்கிரகங்களையும் கடலில் பிரதிஷ்டை செய்தாராம்; அதுவும் இருக்கிறது. நவ பாஷாணத்தில் கடல்சதா அலையெறியாது அமைதியாயிருப்பது ஒரு சிறந்த விசேஷம்.

முஸ்லீம்கள் கதை.

இராமேஸ்வரத்திற்கு இந்துக்கள் செல்வதுபோல முஸ்லீம்களும் தீர்த்தயாத்திரையாகப் போகிறார்கள் (பைபிலிற் பிரசித்திபெற்ற) கெயின் ஏபெல் என்ற இருவரின் கல்லறைகளும் அங்கு இருக்கின்றனவாம், இராமேஸ்வரம ரயிலவே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் ஒரு பெரிய பகுதி காணப்படுகிறது. அதிலே தான் மேற்படி கல்லறைகள் இருக்கின்றனவாம்.

அராலிக் கத்திக்குத்து வழக்கு

சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் (1) எஸ் தம்பிராசா (2) எஸ். கந்தையா என்பவர்கள் திரு சுந்தரம்பிள்ளையின்கீழ் வேலைபார்க்கும் அப்பாக்குட்டி என்னும் ஓர் கார் டிரைவரைக் குத்திக் காயப் படுத்தினர்கள் என அராலி விதானையால் தொடரப் பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. விசாரணையில், யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு ஏ. சி. சுந்தரம்பிள்ளை தமது சாட்சியிற்கூறியதாவது:

சென்ற இரண்டாம் தேதி இரவு 12 மணியளவில் அப்பாக்குட்டியென்பவரை அடித்த சத்தங்கேட்டுத் தெருவிற்போனபோது டிரைவரைக் கண்டேன். நான் என்னுடைய மகனுடன் இவரைப் பொலிஸ் விதானையிடம அனுப்பி விட்டு வேறும் ஆட்களுடன் தெருவில் நின்றேன். எதிரிகள் இருவரும் வந்த போது நான் அவர்களை நீங்கள் ஏன் என்னுடைய டிரைவரைத் தாக்கினீர்களென்று வினவினேன். இதற்கிடையில் டிரைவர் என்னை அழைத்தார். அப்போது கந்தையா என்பவரும் டிரைவரும் சச்சரவுப் பட்டனர். பின் கந்தையா என்பவர் எனது டிரைவரை ஒரு பொல்லால் அடித்தார். அவ்விடம நின்ற ஐயாத்துரை என்பவர் பொல்லைப் பறித்தமாத்திரத்தில் தம்பிராசா கத்தியாற் குத்துமபடி கந்தையா என்பவரை ஏவினர். உடனே கந்தையா என்பவர் ஓர் கிறிஸ்கத்தியை இழுத்து டிரைவரின் தலையிற் குத்தினர். தம்பிராசா என்பவரும் கத்தியை விரித்துக் குத்தினார். டிரைவர் அநேக காயங்களுடன ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

[illegible]துடன் நீதிபதி எதிரிகளிருவ

43

நீங்கள்

ஆஸ்ரின்

செலினை வாங்குவதே

புத்திசாலித்தனம் என்பதற்குரிய நியாயங்கள் வருமாறு:—



டி லக்ஸ் சலூன் ரூபா 2,625/-

1 மிக மலிவாகப் பிரயாணம் செய்தற்கு உதவியாகின்றது
2 செலுத்துதற்கு எளிது; ஓரிடத்தில் நிறுத்திவைப்பதற்கு எளிது
3 தொந்தரவில்லாதது; அதைச் செலுத்துதற்கு அதிக யந்திர அறிவு தேவையில்லை.
4 ஐந்தோ, ஆறோ அல்லது இன்னும் அதிகமான வருஷங்களுக்கோ தொசலின்றிப் பாவிக்கக்கூடியது
5 அதனினும் மும்மடங்கு அதிகமான கார்களிலுள்ள சாமான்கள் எல்லாம் உடையது.
6 இப்போதுள்ள சலூன் கார்களுக்குள் மிகவும் பாரமில்லாத கார்—இதனால், ஓடும் செலவும் குறையும்.
7 சென்ற பன்னிரண்டு வருஷங்களாக, இதினும் பார்க்கச் சிறந்த 'பேபி' கார் வந்தது கிடையாது.

விலை ரூபா 2,150/- இலிருந்து.

மற்றக்கார்களை நீங்கள் விலைகொடுத்து வாங்குகிறீர்கள். ஆனால், ஆஸ்ரின் காரில் செலவிடும்பணமோ பழுதற்ற பணமாகும்.

உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றெட்
கொழும்பு.

யாழ்ப்பாணத்திற்கும்,
திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னர், அநுராதபுரம், ஆகிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & ஸன்ஸ்
அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்
ஆஸ்பத்திரி றோட்டு, யாழ்ப்பாணம்.
Y 137. 19-8-35. — 18-8-36

பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறந்த லதனினு நன்று

யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் சேர்க்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணக் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமயம் ரொக்கம் 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்குமானால் 1 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம் 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்களை வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வசதியான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
(Y 203. 21-11-35—20-11-36) (ஜ.) மானேஜர்

புகையிலைக்குப் பசளையிடுவது

சரியான முறையில் பசளை யிடுவதினால் மாத்திரமே ஏராளமான பயிரையும் திறமான சாதி இலையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொளும்பு கொம்மேர்சல் கம்பனியாரின் புகையிலைப் பசளைக்கலவையைச் சரியான முறையாகப் பாவித்தால் விசேஷ லாபகரமான ஆதாயத்தைக் கொடுக்கும்.

முழுவிபரங்களும் இன்னும் வேண்டிய புத்திமதிகளை இலவசமாக அறிந்துகொள்வதற்கும், கொழும்பு கொம்மேர்சல் கம்பனி லிமிற்றெற், கொழும்பு என்றவிலாசத்துக்கு எழுதவும்.
B. 200. 13-11-35 to 12-5-36.) ஜ

செந்தமிழ் நூல்கள் கூறும் ஐந்திணை அமுதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருதநிலத்தார் வாழ்க்கை இன்பமானது. வயல்வேலை ஆறு மாதமே. ஏனைய மாதங்களில் வேலையற்றுத் திரிய வேண்டிய நிலையில் ஆடவர் அமைகின்றனர். எனவே அவர்கள் உல்லாச வாழ்க்கையை விரும்புதல் இயல்பே. அவர்தம் உல்லாச வாழ்க்கைக்கு உற்ற துணையியாகப் 'பரத்தையர்' உறுதலும் இயல்பே. இப்பரத்தையர் (பாணர்-பாணிச்சியர் அல்லர்) ஆடல் பாடல்களில் வல்லுநராயிருத்தல் பின்னும் பாராட்டற்பாலது. எனவே காமநிறைந்த ஆடவர் இப்பரத்தையரிடை வதிவதும், பின் இல்லம் போதலும் இயல்பு. இக் கூடா ஒழுக்கத்தைத் தலைவி அறிவாளாயின், அவர் தலைவனிடம் சிறு கோபங் கொள்வள். இதனை 'ஊடல்' என்பர் முன்னையோர். இவ்வூடலைத் தலைவன் தக்க சமாதானங் கூறித் தணித்துத் தலைவியை மகிழச் செய்து அவளோடு கூடும் கூட்டம் 'கூடல்' எனப்படும். இதுவே இம் மருதநிலப் பண்பு. ஊடல் நிகழ்ந்த பின்னர்க் கூடல் நிகழுமாயின், அஃது எத்துணைப் பேரின்பம் பயப்பதென்பது பழம் பாக்களாலும் இல்லத்து நடைமுறையாலும் இனிதுணரலாம்.

பரத்தையர்க்கும் தலைவிக்கும், இக்காலத்தும் அவ்வப்போது மனவருத்த வாதங்கள் நிகழ்தல் யாண்டும் காண்பதுபோலவே, பண்டைநாளிலும் பயின்றிருத்தல் நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. ஒரு பரத்தை, தலைவி பாங்காயினோர் கேட்பப் பின் வருமாறு கூறுகின்றாள்: "புது வெள்ளம் வந்தபெரிய நீர்த்துறையை விரும்பி யாம் எமது கூந்தலில் ஆம்பலின் புறவிதழ் ஒசித்த முழுப் பூவைச் செருகி அப்புனல் விளையாட்டைச் செய்யச் செல்வோம்; தலைமகள் அதனை அஞ்சினளாயின், வெம்ப போரில் தூசிப்படை அழியும்படி எதிர்த்து நின்ற பல வேல்களையுடைய 'எழினி' பசுக்கூட்டத்தைக் கவர்ந்து கொண்ட பசுக்கூட்டத்தை உரியவர் ஒன்று கூட்டித் தடுப்பது போலத் தோழியர் சூழ்த்துடன் அவள் தன் கொழுநனது மார்பை எனது கைக்கு அகப்படாதபடி காக்கட்டும்."

'கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறும்; தானஃ து
அஞ்சுவ துடைய ளாயின், வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு காக்க, தன் கொழுநன் மார்பே"

—குறுந்தொகை, 80

என்பது அப்பரத்தையின் கூற்று. இதனை நோக்கப் பரத்தையின் மனப்பான்மையும் அவள் தலைவனிடம் பெற்றிருந்த செல்வாக்கும் நன்கு விளங்கும். பரத்தையர் வெளியே வருகையில் தலைவி அவர்களைத் தலைவன் காணுதவாறு செய்யும் வழக்கமும் உண்டென்பது பின்வரும் பாவால் புலனாகும்: "இப்பரத்தை பாத்த கண்களையுடையளாய், நறுநாற்றம் அளாவிய கூந்தலையுடையளாய், அகன்ற தோள்களையும் வெண் பற்களையும் உடையளாய், ஒன்றை ஒன்று தாக்குறும் தொடைகளைப் பெற்றவளாய், தழைகளை ஆடையாக அணிந்தவளாய், விழா முற்றத்தை அணி செய்ய வருகின்றாள்; அவளால் கலக்குறு வகையில் நங் கொழுநனைக் காமின்" எனத் தோழி தலைவியை எச்சரிக்கின்றாள்:

'மடக்கண் தகரக் கூந்தற் பணைத்தோள்
வார்ந்தவாலெயிற்றுச் சேர்ந்துசெறிகுறங்கிற்
பிணையல் அந்தழைத் தைஇத், துணையிலள்
விழவுக்களம் பொலிய வந்துநின் றனளே
எழுமினோ! எழுமினெங் கொழுநற் காக்கம்!''

—நற்றிணை, 170

தலைவன் பரத்தையர் ஒழுக்கத்தில் இருந்தலையறிந்த தலைவி வருந்து இல்லறவியல் வழாது நடந்து வருதலையும், தாங்கள் விரும்புவது இன்னதெனபதையும், தலைவனைக்கண்ட தோழிகள் அவற்கு எடுத்திடும்பல் நூல்களில் இன்பம் பயப்பதாகும்:

'விளைக வயலே வருக இரவலர்
எனவேட் டோளே யாயே; யாமே
பல்லிதழ் நீலமொடு செய்தல் நிவக்கும்
தண்டுறை ஊரன் கேண்மை
வழிவழிச் சிறக்க எனவேட் டாமே''

—ஐங்குறுநூறு, 2.

(தலைவியைத் தோழிகள் 'ஆயே' என்னல் நூல் வழக்கமாம்.) இதனால் தலைவியின் இல்லறச் சிறப்பு இனிது விளங்கும். பரத்தையரை விட்டுத் தன்னிடம் வந்த தலைவனை நோக்கித் தலைவி,

'வேண்டேம் பெரும! நின் பரத்தை
யாண்டுச்செய் குறியோ டீண்டுநீ வரலே''

—ஐங்குறு நூறு, 48.

'என்னலம் தொலைவ தாயினும்
துன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த மார்பே''

—ஐங்குறு நூறு, 63

எனத் தனது வெறுப்பைக் காட்ட, தலைவன் தான் அக்கூடா ஒழுக்கம் செய்திலன் எனச் செப்புவன். அதற்குத் தலைவி நகைத்து,

''மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந!
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிறறதொளியே?''
'இறுவரின் இனைய செய்தி
நகாரோ பெரும! நிற் கண்டிசி னோரே?''

எனப் பரத்தையர் கூட்ட முன்மையை வலியுறுத்துப்பேசிக் கோபப்படுதல் உண்டு. பின்னர்த் தலைவன் பலவாறு சமாதானங் கூறித் தலைவியைக் கூடுவன். பரத்தையர் கூட்டுறவு தலைவற்கிருந்ததேனும், அதனைத் தலைவியும் தோழியும் மூறமும் வெளிப்படுத்தினாரல்லர் எனபதும், தலைவன் தலைவியினிடம் என்றும் நீங்கா நட்புடையனயிருந்தான் என்பதும், தலைவன அங்ஙனம் பரத்தையர் இல்லம் சேறல் மருதத்து மட்டுமே என்பதும பண்டைய நூற்பயிற்சியுடையோர் நன்கறிந்தசெய்திகளாம்.

சைவ பரிபாலன சபை.

(4-5-36 இன் தொடர்)

Where he was educated from the lowest standards.

Physical Education.

Turning to the physical side, I am very sorry to state that there is no play-ground attached to the College where the boys can have their games. The school games are important to train the body as the school lessons are to train the mind.

The neglect of the body cannot but tell upon the healthy state of the mind. As it is not practicable at present to buy lands adjoining the College to have a playground it is necessary that we should soon have well equipped gymnasium where under the guidance of a gymnastic instructor the boys should be made to take regular exercises.

Physical drill should also be introduced in the lower classes, to cultivate the habits of obedience and order. It will greatly help in the maintenance of dicipline.

The Library

A sum of Rs. 400 has been spent during the year in making additions and lending library. The latest edition of the Encyclopaedia Britanca was purchased and nearly hundred books were added to the Lending Library.

Physical and Chemical Apparatus

The Old Boys of the College collected Rs. 500 for the purchase of scientific apparatus and with this sum I have ordered for the necessary apparatus to teach Elementary Physics and Chemistry for he Madras Matriculation. I hope that the apparatus will arrive from England before the deputation from the University will visit the College.

Success of our Old Boys

Mr. K. Sivaprakasam passed the proctor's examination and is now practising in the District Court Jaffna. Mr. A. Arumugam has passed the last proctor's fiinal Examination

Ridgeway Scholarships

A sum of Rs. 1750 collected by the leading Tamils in Colombo to erect a fitting memorial to the Right Honourable Sir Ridgeway for giving the people of the North a railway, was handed over to the College in 1904 for founding Ridgeway Scholarships to be awarded annually to boys who are good in singing Thevarams (the Sivite sacred hymns) 1 express the thanks of the College to those gentlemen who have made this endownment" என்றும், பசுபதிச்செட்டியாராலே இக் கல்லூரிக்கு அளிக்கப்பட்ட கிட்டங்கியின் ஒரு வருஷ வாடகைப் பணத்துக்கு வாங்கிய புத்தகங்களும் பரிசுகளாக உதவலாயின. அசௌக்கியமுற்றிருந்தமையால் அன்று பசுபதிச்செட்டியார் அப் பரிசளிப்புக் கொண்டாட்டத்திற்கு வரவில்லை. அதை இந்துசாதன பத்திராசிரியர், "As every body knows, he is one of the chief founders of the Hindu College, and his genial presence was very much missed at the prize-giving of the College" என்று குறிப்பிட்டுள்ளார். அன்று அக்கிராசனம் வகித்திருந்த வித்தியாகர்த்தர், "இற்றைக்கு முப்பது நாற்பது வருஷங்களுக்குமுன் இலங்கையில் ஆங்கிலங் கற்றோரினதும் இப்பொழுது கற்பவர்களினதும் தேர்ச்சியின தாரதம்மியத்தை எடுத்துக்கூறி ஓர் சிறந்த உபந்நியாசம் செய்தனர். இப்பொழுது கல்லூரிகள் பாடசாலைகளிற் கற்றுத் தேறும் மாணவர்களிலும் முன்னிருந்த கல்லூரிகள் பாடசாலைகளிற் கற்றுத்தேறினவர்கள் இங்கிலிஸ்பாஷையிலதிகதிறமையுடையவர்களாயிருந்தார்களென்றும் உபாத்திமார் அக்காலத்தில் சிறுகாரியங்களிலும் அதிக கவனம் செலுத்தி முழு மனத்தோடும் அதிக ஊக்கத்தோடும் தங்கள் கடமைகளைச் செய்து வந்தமையாலேயே அக்காலத்து மாணவர் இங்கிலிசில் அதிகதேர்ச்சி யடைந்து வந்தார்களென்றும், இக்காலத்திலே கல்லூரிகள் பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கப்படும் விஷயங்கள் அதிகமாயிருந்தாலும் ஒழுங்காயும் க்கிரமமாயும் படிப்பிக்கப்படவில்லையென்றும் சொன்னார். பின் அதிகாரசபைத் தலைவர் அத்துவக்காத்து அ. கனகசபை இக் கல்லூரிக் கட்டடத்தின் வடபாகத்தைக் கட்டிமுடிப்பதற்கு நம்மவர்கள் உதவிபுரிய வேண்டுமென்று விரிவாகப் பேசினர்.

— (தொடரும்)

விசாக தினத்திற் சீவரட்சை

பெருவலையில் வசிக்கும் சில பௌத்த அன்பர்கள் இறைச்சிக்காக மாடு அடிப்போர் விலைக்குவாங்கிக்கொண்டுவந்து கட்டியிருந்த மூன்று மாடுகளுக்குத் தனித்தனி ரூபா 30 விலை கொடுத்து வாங்கி அவைகளை மீட்டுச் சென்றனர். இன்னுஞ் சில பௌத்த அன்பர்கள் விசாக தினத்தன்று பரதவர் உயிரோடு பிடித்து வைத்திருந்த ஒரு பெரிய ஆமையின் பொருட்டு அப்பரதவர்களுக்கு 15 ரூபா கொடுத்து அதனைத் தாம கொண்டுபோய் கடலுள் விட்டனராம்; இப்படி பெடிலாக்கொடைக் கடலில் பிடித்த ஆமையொன்றை, பிடித்தோரிடம் விலைகொடுத்து மீட்டுக் கடலில் விட்டார்களாம்.

யாழ்ப்பாணத்திலும் ஹரிசனர் முன்னேற்றம்

சென்ற பூரணை தினத்தன்று காரவெட்டி ஞாயிற் பிள்ளையார் கோவிலில் தேர்த் திருவிழா நடைபெறலாயிற்று. அவ்வமயம் அங்குள்ள விரித்த நோக்குள்ள சில வாலிபரது கன்முயற்சியினால், வெளி வீதியில், சுவாமிக்குப் பின்னால், பழுவ வம்சத்தைச்சேர்ந்த பக்தர்கள் சிவநாமாவளி பாடிச்செல்ல அநுமதிக்கப்பட்டனர்.

விரைவில் வெளிவரும்! எதிர்பாருங்கள் ¡!

கனிஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப்பத்திர வகுப்பு (1937) [J·S·C·] இலக்கியக் குறிப்பும், சிரேஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப்பத்திர வகுப்பு (1937) [S·S·C·] இலக்கியக் குறிப்பும்.

இவை சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றன. இவைகளில் பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள். சொல்லிலக்கணம், சொல் நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளன.

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.

(Mis 12. 13-4-36.) தி

ஆரோக்கிய லேகியம்.

சிறந்த மலசுத்தி ஒளஷதம்.

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலங்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் நித்திரை ஸ்கலிதம், நீருடன் ஸ்கலிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை காலசதி, குடைச்சல், நீக்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடை டின் விலை ரூ. 2·00 தபால்செலவு சதம் 75.

நீரழிவுக்கு.

அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் ஊசி நுழையும்படியான சிறிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு சிட்டிகை எடுத்துப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரழிவில் அளவுமீறி ஓடும் நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12 50 சதம்.

ஸ்பெஷல் அநுபானம் சதாவாரி லேகியம் ரூபா 4·00.

தங்கபஸ்பம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விர்த்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இனாம்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அநுபானம் லேகியம் ரூபா 2-50.

வெளிநாட்டார் ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 7-36 தி (Palni S. I.)

"இரதி மன்மத"

சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீரணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஒளஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஒளஷதத்தின் விலை ரூபா } 4 0 0

தபால்சார்ஜ வேறு.

N· B· முழுவிவரங்களடங்கிய "ஒளஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள "சித்த" ஒளஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், **Quilon S· India**

H 208. 1-12-35 to 31-5-36

---

* * *

வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்னுடாங்க்" தெலிபோன் நெ. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகத்திலுள்ள ஏனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12வீத வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலுங் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், நோட்டுகள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்துண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திற்கும்போய் இறங்கத்தக்கதாக, கமிஷனின்றி கப்பற்துண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பீ. ஜோசெப்,
மனேஜர்.

(Y. 188. 21-10-35—20-10-36.) தி

* * *

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக ரோகிகளுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் ரோகிகள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலா முஸ்லி, சட்டேமுத்ஸலிவி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதாம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதக்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல். வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம். சிங்கப்பூர்பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.

Y55 1-1-34 to 31-12-36) சிலோன்.

வண்ணைநகர்

தையல்நாயகி

கலிவெண்பா

திருவூஞ்சல்

முத்துக்குமாரசுவாமி

திருவூஞ்சல்,

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஓரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5.

மானேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை,
வண்ணார்பண்ணை.

விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

1	பந்தி	(கலம்)	ரூபா	10-00
½	,,	,,	,,	5-50
¼	,,	,,	,,	3-00
1	அங்குலம்		,,	1-00

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை

Nethrananda Thailaya

Ceylon's Premier Curative Medicine Oil·

நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா **2·50**.

தபாற்கூலி **45** சதம்.

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, த[illegible] நரை, பீனிசம் ஆகியவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள சனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

[illegible] முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று கூர்ந்தறிகிற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—

வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—

பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332. 20-3-36 to 19-9-36)

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

பத்திரக் கிரயம்.

(முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.)

யாழ்ப்பாணப் பட்டினம்	தமிழ் ரூ. ச.	ஆங்கிலம் ரூ. ச.	இருபிரதிகளும் ரூ. ச.
(நகரசங்க எல்லைக்குட்பட்ட)			
ஒருவருடத்திற்கு	5 - 00	5 - 00	9 - 00
½ வருடத்திற்கு	3 - 00	3 - 00	5 - 00
¼ வருடத்திற்கு	2 - 00	2 - 00	3 - 75
இலங்கை இந்தியா			
ஒருவருடத்திற்கு	8 - 00	8 - 00	12 - 00
½ வருடத்திற்கு	4 - 50	4 - 50	7 - 00
¼ வருடத்திற்கு	2 - 50	2 - 50	4 - 50
சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள்			
ஒருவருடத்திற்கு	9 - 00	9 - 00	13 - 00
½ வருடத்திற்கு	5 - 00	5 - 00	7 - 50
¼ வருடத்திற்கு	8 - 00	3 - 00	5 - 00

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
தும்பணித்தெரு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 11th May 1936.